முரசொலி

வார இதழ்

ஆசிரியர் மு. கருணாநிதி

முரசு 2 | 23-3-56 | வெள்ளி | ஒலி 51

குறளோவியம்

ஏடெடுத்துக் கவி வரையத் தொடங்குகின்றான். எழுத்திலெல்லாம் அவள் உருவம்! உயர் தமிழன் வீரங்கூற ஓலைமீது ஆணி ஓட்டுகின்றான்......அந்த ஆணிப் பொன்மேனியாள், நாணிக்கோணி நடமாடுகின்றாள் சுவடி மீது!

"வேல் வீசும் வீரனே!" என்றெழுதக் கோலெடுத்து "வேல் விழியே தமிழ் விருந்தே" என முடித்தான். பின் திகைத்தான். ஓலைதனை வீசி விட்டு ஓவியம் வரைவோமென ஓர் யானை மீது சிங்கமொன்று பாய்தல்போல எழுதுதற்கு எண்ணமிட்டு, வண்ணங்குழைத்து — இறுதியிலே யானையின் மறைவினிலே இரு மான்கள் கூடி நிற்கும் சித்திரத்தைச் செய்து வைத்தான். அந்த நினைவிழந்த விசித்திரத்தை அவன் கண்டு "அவளைக் கண்டாலே குழப்பம் நீங்கும்" எனத் திடங் கொண்டு புறப்பட்டான்.

அங்கு அவள் நிலையோ.....

அவனைக் காண்பதற்கு ஏங்கி ஏங்கி பூத்துவிட்ட கண்ணோடு புலம்புகின்ற நெஞ்சோடு புறப்பட்டு வருகின்றாள், பூக்காட்டில் நுழைகின்ற தென்றல்போல!

"எதிர்வருவான்—வந்தவுடன் அத்தான் என அணைக்க வேண்டும். ஈருடல், ஓருயிர் என்ற மொழியைப் பொய்யாக்கி ஒருயிரும், ஓருடலும் நாங்கள் என்பதை அந்த நாகணவாய்ப் புள்ளுக்கும் காட்ட வேண்டும். பாட்டாக்கி வைத்திருக்கும் காதல் நினைவுகளைக் காட்டாற்று வெள்ளம்போல, கவிஞனின் உள்ளம் போல் மடை திறந்து விடவேண்டும்.

பாடும் குயிலும், ஆடும் மயிலும் பாடங்கேட்க என்னிடந்தான் வரவேண்டுமென என்னவர் கூற அதோ மதுமாந்தித் தேனிதழில் தோய்ந்து கிடக்கும் வண்டினங்களுக்கு நீவிர்தான வாத்தியாரோ என நான் கேலி பேச......வேலியற்ற தோட்டத்து விளைச்சலை ஆடு மாடு மேய்தல் போல தடையில்லா காதற் களத்தினிலே "போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்"தென்னும் பழமொழியை எட்டித் தள்ளி இன்பப்பண் இசைப்போம்; இருவரும் ஒருவராய்!"

என எண்ணி நண்ணினாள் அவனிடம்—இருவரும் பார்த்தனர், ஊமைகளாயினர், ஓராயிரங்கதை பேச வேண்டுமென வந்தாள்—காதற்பாயிரமாம் கடைக்கண் மட்டும் தந்தாள். நாணம் தலையைச் சாய்த்தது. பேச நினைத்தவைகளை — செயலாற்றக் கருதியவைகளை— எல்லாவற்றையும் மறந்து போனாள்.

கண்ணே என்பது—கட்டித் தழுவுவது—இவைகளல்ல காதல்—அதோ அந்த ஊமை உணர்ச்சி அவள் விழியின் மூலம் வெளிப் படுகின்றதே அதுதான்காதல்!

அவன் அவளைக் கேலி செய்கிறான்.

"நீ என்னிடம் சொல்வதற்கு வெட்கப்பட்டு மறைத்தாலும் நிற்காது உன்னையும் மீறி உனது விழிகள் எனக்குச் சொல்லக் கூடிய செய்தி ஒன்று இருக்கிறது!"

இந்தக்குறும்பு வள்ளுவர் தரும் கரும்பு! இதோ குறள்

"கரப்பினும் கையிகந்து ஒல்லாநின் உண்கண்
உரைக்க லுறுவது ஒன்று உண்டு."

(கருணா)

முகமும், மீசையும்! (மு. க.) - (பக்கம்-6)

விலாசம் தெரியவில்லையாம்!

குருபீடமா? குப்பைமேடா?

ரத்த நாக்கைச் சுழற்றிக் கொண்டு திரியும் வேங்கைப் புலியைவிட, விஷ நாக்கைத் தொங்க விட்டுக்கொண்டு உறங்குவதுபோல் இருக்கும் கிழ நரியின் நெஞ்சத்திலே பயங்கர எண்ணங்கள் உருவாகிக் கொண்டே இருக்குமாம்! மிருக இனத்தில் குள்ள நரியின் பண்பு உணர்ந்தோர் இப்படிக் கூறுவர்.

எத்திப் பிழைக்கவும், ஏமாற்றி வாழவும் கற்றிருக்கும் சூதுமதியினரைக் குள்ளநரிக் குணம் படைத்தோர் என்று கூறுவதும் இதனால்தானே என்னவோ!

பகைக் குலத்தின் ரத்தத் தடாகத்தில் நீச்சல் விளையாடிய மாவீரர்களை விட; பதுங்கி நின்று பல்லிளித்து, குழி பறிக்கும் எண்ணம் நெஞ்சத்திலே கொப்பளிக்க கூடிக் குலவிய அரசியல் குள்ள நரிகள் ஏற்றம் பெற்று 'ஏன்?' என்று எவரும் கேட்க முடியாத அளவிற்கு உயர்ந்த இடத்தை எட்டிப் பிடித்து, மன்னன் தயவிற்கும், மகாராணியின் அன்பிற்கும் ஆளாகி, அரியாசனத்திற்கு சரியான ஒரு ஆசனத்தில் அமர்ந்து அரசோச்சும் நிலை பெற்றிருக்கின்றனர்; சுயநலக்காரர்களும் சூழ்ச்சி மனம் கொண்டோரும் குள்ள நரி சாகசத்தால், சுக வாழ்வு பெற்றார்கள்; அத்தகையோர் நாட்டு மக்களை சுழலும் பம்பரமாக்கி ஆட்டிப் படைத்தனர் என்று குறிப்பிடும் அதே சரித ஏடுகள்; அந்த பாதகர்களின பயங்கர முடிவு எத்தகைய கொடுமை நிறைந்தது என்பதையும் குறிப்பிடாமல் இல்லை.

குதிரை திருடியவன் குருபீடத்தில் அமர்ந்து, கோலேந்தியின கடிவாளத்தை தன் கையிலே பிடித்து வைத்திருக்கின்ற அளவிற்கு உயர்ந்தும், பட்டத்து ராணியின பனிப்பார்வையில நனையவும், கனி மொழியில் களிக்கவும் பளிங்கு மேனியாளின் பக்கத்திலே நிற்கவும்; பவளவாய் சிந்தும் பாராட்டுகளை கேட்டு குளிர்ச்சி பெறவுமான ஓர் உன்னத நிலையை — ஒப்பற்ற வாழ்வை, கூண்டிலே ஏற்றப்பட வேண்டிய குற்றவாளி, தாடி வளர்த்து தபோதனர் வேடத்தால் தன் கபடத்தை மறைத்துக் கொண்ட ரஷ்ய மண்டலத்துக் குள்ள நரி, ரஸ்புடீன் பெற முடிந்தது என்று படிக்கும் போது, நாம் அதிர்ச்சியடையாமல் இருக்க முடியவில்லை

ஜனநாயகம், பற்றிய எண்ணமே அரும்பு விடாத அந்தக் காலங்களில் ஜனநாயகம், உரிமை, விடுதலை இது பற்றி குரல் எழுப்புவது பயங்கரமான குற்றம் என்று கருதப்பட்ட அத்தகைய இருள் படிந்த காலங்களில் ரஸ்புடீன் நடமாடியதும், ஜார் பரம்பரை வாழ்ந்து கொண்டிருந்ததும் ஆச்சரிய மில்லை, ஏன்; தவறில்லை என்றுகூட கூறலாம்.

சிந்தனைக் கதவுகள் மூடிக் கிடந்த நேரம்; சீமான்களின் சீற்றமும்—சிரமறுக்கும் வேந்தனின் கோபப் பார்வையும், தங்கள் உயிர் பறிக்கும் சக்திகள் என்று நம்பி நடுங்கிக் கிடந்த வேளை, நாச காலர்களும், நயவஞ்சக மனம் கொண்டோரும் நடமாடியதில், நாசங்களை விளைத்ததில் வியப்பென்ன இருக்கிறது?

உரிமை எண்ணமும், விடுதலை வேட்கையும், சுயமரியாதை உணர்வும் அடிவானத்து பரிதி போல் சுடர் வீசிக் கொண்டிருக்கும் இந்த 'மறுமலர்ச்சி' யுகத்திலேயே, ரஸ்புடீன் மனமும், ஜார் மன்னனின் திமிர்வாதமும் கொண்ட மாம்பலத்து மகான்—வேளை கிடைக்கும் போதெல்லாம் விஷ நாக்கைச் சுழற்றிக் கொண்டிருக்கும்போது; சரித்திரத்தில் தோன்றி மறையும் அந்தக் கொடுமையாளர்களை நாமெப்படி குறை கூற முடியும்?

ஜார் மன்னன்—மக்களை மண்ணில் நெளியும் புழுவாகக்கூட கருதவில்லை!

ரஸ்புடீன், என் சுட்டுவிரல் அசைவிற்கு திசை மாறும் செம்மறியாடுகள்—இந்த நாட்டு மக்கள் என்றான்!

கட்டழகி ஜரீனா கலகலவென சிரித்தாள இதைக் கேட்டு!

அந்த ஜாலக்காரியின் கிளிப் பேச்சிலே குளிர்ச்சி கண்டான்; நிக்கோலஸ் மன்னன்; நெடுமரம்!

இப்படியொரு ராஜ தரு தங்களுக்கு கிடைத்து விட்டானே என்ற பேரானந்தம் அந்த தம்பதிகளுக்கு;

சிம்மாசனத்தின் சொகுசு; சிற்றிடையாளின் பாராட்டு; ஜார் மன்னனின கைலாகு; அந்த கபட வேடதாரி ரஸ்புடீனை திமிர்வாதம் பேசச் செய்தது!

துணிந்து சொன்னான்—இந்த நாட்டு மக்கள் என் சுட்டுவிரல் அசைவிற்கு திசை மாறும் செம்மறியாடுகள் என்று!

ஆனால் அந்த ஜனநாயக வைரியின திமிர் பிடித்த உடல், சரித்திரக் குப்பைத் தொட்டியிலே கிழித்தெறியப்பட்ட சம்பவத்தை படித்த பிறகும் ஆச்சாரியார் துணிந்து பேசி இருக்கிறார்; மக்கள் செம்மறியாடுகள் என்று!

ரஸ்புடீன் சொன்னான் இதையே—ஆனால் மக்களின் மனம் வளம் பெறாத நாட்களில்!

அசைந்தாடும் அரண்மனை ரோஜாக்களின் தங்கமேனியில்; சந்தனக் கன்னங்களில்—முகம் புதைத்து, மோக போதையிலே மிதந்தான் ரஸ்புடீன்! தாகமெடுத்தால திராட்சை ரசம்! அதனினும் இனித்திடும் மாதுளை இதழ் தரும் இன்பவல்லிகள் அவனைச் சுற்றிலும், இட்ட அடி நோக, இன்பமெலாம் கொப்பளிக்க; இடை நெளியவும் ஆடை நெகிழவும் வெறிக கூத்தாடிய பருவக் கிளிகள்; பக்கத்திலே பட்டத்து ராணி! இந்நிலையில் திமிர்வாதம் பேசினான்; நாட்டு மக்கள் அந்த நடமாடும் நாகத்தின் கண்களுக்கு ஆட்டு மந்தைகளாக தோற்றமளித்தார்கள்!

அகில ரஷ்யாவின் ஏகச் சக்ராதிபதி—ஜார் மன்னன் நிக்கோலஸ்—அவன் பட்டத்து ராணி ஜரினா—அந்த சுக போகிகளின் கண்களுக் கெல்லாம் மக்கள் பொட்டுப் பூச்சிகளாக, புழுக் கூட்டமாக தோற்றமளித்ததில் வியப்பில்லைதான்!

மக்களின் கருத்தைக் கேட்டுத்தான் ஆட்சித் தேரை ஓட்ட வேண்டுமென்ற அவசியம் அவர்களுக்கு ஏற்படவில்லை; அது தேவையுமில்லை என்று கருதினார்கள். மக்களின் குரலை செவி கொடுத்து கேட்பதே ஜார் வம்சத்திற்கு அவமானம்: நிக்கோலஸ் மன்னனுக்த அப கீர்த்தி—ரஷ்ய மண்ணுக்கே களங்கம், என்று கருதினர், காட்டாட்சி நடத்தினர் கருநாகமாம் ரஸ்புடீன் கையிலே சாட்டை!

மக்கள் புன்மைத் தேரைகளாய் அடங்கிக் கிடந்தனர்.

★

ஆனால் இங்கோ, ஆண்டு அலுத்தவர்; அஸ்தமனத்தை நோக்கி அவசரமாக நடைபோடும் 'அரசியல் மேதை' கனம் காமராசருக்கு ஜனநாயகத்தைப் பற்றி ஒரு விளக்கம்; விசித்திரமான ஒரு விளக்கம் கொடுத்திருக்கிறார்;

''மக்கள் கருத்தை அறிந்து தான் ஆட்சியாளர்கள் நடக்க வேண்டுமென்பது ஆடுகள், இடையனுக்கு வழி காட்டுவது போலாகும்! ஆரம்பத்திலேயே மக்களின் அபிப்ராயத்தைக் கேட்டறிவது ஜனநாயகமல்ல; சமுத்திரத்தில் ஆற்றோடு அடித்துக் கொண்டு போய்விடுவது போலாகும்.''

புத்தனும், ஏசுவும் யாரைக் கேட்டுக் கொண்டு காரியமாற்றினார்கள் என்று அன்றொரு நாள், இறுமாப்பாக பேசிய அதே ஆணவக்காரர் ஆச்சாரியார் தான் பேசியிருக்கிறார் மேலே தரப்பட்ட வாசகங்களை!

இந்நாட்டு மக்கள் ஆட்டு மந்தையாம்; ஆள வந்தார்கள் மக்களின அபிப்பிராயத்தைக் கேட்டு நடப்பது, ஆடுகள் இடையனுக்கு வழி காட்டுவது போன்ற செயலாம்! இந்த ஆரிய குலக் காவலருக்கு தங்கள் மூதாதையின் நினைவும், அவர்கள் இந்த சுந்தர பூமியில நுழையும்போது உடன் ஓட்டி வந்த ஆட்டு மந்தைகளும் இன்னும் நினைவை விட்டு அகலவில்லை போலும்!

அந்த நினைப்புதான் இந்த நாட்டு மக்களெல்லாம் அந்த ஆரியகுல மகிபரின் விழிகளுக்கு ஆட்டுக் கூட்டமாக தோற்றமளிக்கிறார்கள்.

'ஆரம்பத்திலேயே மக்களின் அபிபபிராயத்தைக் கேட்பது ஜனநாயகமல்லவாம்!'

ஆரம்பத்திலே மக்களின் அபிப்பிராயத்தைக் கேட்காமல், அஸ்தமனத்தின் போதா கேட்டுக் கொண்டிருக்கிறார்கள் ஜன நாயகம் செலுத்தும் உலக நாடுகளில்!

மக்களுக்கு ஓட்டுரிமை வழங்கப்பட்டிருப்பதே மக்களின் அபிப்பிராயத்தை ஆரம்பத்திலேயே ஆட்சியாளர்கள் பெற வேண்டும் என்ற உன்னத கோட்பாட்டின் அடிப்படையிலேதான் என்ற ஜனநாயக அரிச்சுவடியை அரசியல் 'மேதையான' ஆச்சாரியார் மறந்திருப்பது, அறிவு தடுமாற்றமோ ஆணவமோ நாமறியோம்.

ஓட்டுச் சீட்டுகளை கையிலே வைத்திருக்கும் மக்களுக்கு முன்னால்—ஆட்சி பீடம் ஏற நான் தகுதியுடையவன்தானா? என்ற வினாவோடு அரசியல்வாதிகள் மக்கள் மன்றத்தில் நிற்பது மக்களின் அபிப்பிராயத்தை ஆரம்பத்திலேயே கேட்பதுதான் ஜனநாயகம் என்பதைத் தவிர வேறென்ன பொருள் கொள்ள முடியும்?

கொல்லைப்புறம் ஏறி கொலு மண்டபத்தில் நுழைபவர்களுக்கு, மக்களின் அபிபபிராயத்தைக் கேட்பதும்—அதன்படி நடப்பதும் 'ஜனநாயகமாக'த் தெரியாதுதான்!

மக்கள் ஆட்டு மந்தைகளாக அதனிலும் கேவலமாக தோற்றமளிப்பதும் ஆச்சரியமில்லைதான்!

அதுவும் ஆரிய குலக் காவலராம் ஆச்சாரியாருக்கு 'ஜனநாயகம்' என்ற தத்துவம் பிடிக்காத ஒன்று!

★ தொடர்ச்சி 10-ம் பக்கம்

தலையங்கம்

காதலிலே கவிதையிலே களம் போதும் பேச்சு;
கணவனுக்கும் மனைவிக்கும் திராவிடமே மூச்சு!

சென்னை 23--3--56 வெள்ளி

ஆட்லி அறிவுரை!

அதிகாரம் சாஸ்வதம் என்னும் ஆணவப் போக்கினால் கோலேந்திகள் கோர சொரூபமெடுப்பதும், இறுதியில் கோவணாண்டிகளாய் மாறி தலை தெறிக்க ஓடி ஒளிவதும் சரித்திரத்துக்குப் புதிய நிகழ்ச்சியல்ல!

கூற்றம் அனையவர் குரல்வளையை நெறிக்கக் கொட்டடா முரசு! என பாரதிர முழக்கியோரும், அந்த முழக்கம் முற்றுப் பெறுவதற்கு முன்னமே மாடியில் வெடடுப்பட்டு வீழ்ந்தோரும் கொட்டிய ரத்தத்திலே அதிகார மேடை அதிக நாள் நிற்க முடியாமல் தெப்பம்போல் மிதந்திருக்கிறது!

உரிமை என்று சொல்கிறாய்? கிழித்தெறியுங்கள் அந்த வாயை—என்று கர்ஜனை புரிந்தவர்கள் பின் வாய் திறக்கவே முடியாத நிலையை அடைந்திருக்கின்றனர்!

—அந்த பலனைத்தான் இந்த உபகண்டத்தைப் பொறுத்த வரையில் வெள்ளை ஏகாதிபத்யம் பெற்றிருக்கிறது இப்போது!

அடக்குமுறை ஒன்றை மட்டுமே நம்பி ஆட்சிச் சக்கரத்தை உருட்டியவர்கள் இன்று உரியவர்களிடம் அரசை ஒப்புவித்துவிட்டு ஓடி விட்டார்கள்!

அன்று அவர்களுடைய ஆணவப் போக்கிற்குப் பலியானோர் இன்று வரிசை வரிசையாக விருதுகளைச் சுமந்து வருகின்றனர்.

அரசாங்கத்தைக் கவிழ்க்கு முகத்தான் ரயிலைக் கவிழ்த்தவர்கள்—தபால் நிலையங்களுக்கு கொள்ளி வைத்தவர்கள்—தடியடிக்குப் பலியானோர்—இவர்களெல்லாம் தியாகிகள் என்ற பட்டத்துடன் ஐந்து ஏக்கர் நிலத்துக்கும் உரியவராயினர்!

—இந்த ஏற்பாட்டைத் தனது ஆட்சிக் காலத்தில் நிறுத்திவைத்த ஆச்சாரியாருக்கோ இன்று வேறு வகையில் கௌரவப் பத்திரம் வாசித்தளிக்கப் படுகிறது!

வேலூர் சிறைச்சாலையில் ஆச்சாரியார் இருந்த அறை இப்போது நினைவுச் சின்னமாம்! அதைக் கவர்னர் பிரான் திறந்து வைத்திருக்கிறார், சென்ற கிழமை!

அவருடைய 'திருஉருவப்படம்' கூட அந்தச் சிறையின் சின்ன அறைக்குள்ளே திறந்து வைக்கப் பட்டிருக்கிறது!

சிறைக்குள்ளே ஆச்சாரியார் படம்—

எவ்வளவு பொருத்தம்! எவ்வளவு பொருத்தம்! — என்று கூறத் தோன்றும்! ஆம்; உண்மைதான்! அடக்குமுறையின் தந்தையே அடக்குமுறைக்கு ஆளானதைக் கௌரவிப்பதற்குத்தான் இந்த ஏற்பாடாம்!

அப்போது பேசிய அமைச்சர் சுப்பிரமணியம் குறிப்பிடுகிறார்.

"இந்தப் படம் சிறையிலிருப்போரை எவ்விதம் நடத்த வேண்டும் என்பதை அதிகாரிகளுக்கு ஞாபகப்படுத்தும்."

—என்று!

'ராஜாஜி'யின் படத்தைப் பார்ப்பதனால் அன்பு சுரக்கப்பெற்று, அதிகாரிகள் கைதிகளிடம் பரிவாயிருப்பார்களாம்!

—எப்படி இருப்பார்கள்?

புத்தரின் படத்தைப் பார்த்த பிறகு வேண்டுமானால் இதயத்தில் பாசம் அரும்பலாம்; கைதிகள் பால் கனிவு பிறக்கலாம்!

ஆனால் ஆச்சாரியாரை படத்தில் பார்க்கும்போது இந்த உணர்ச்சி எப்படி உருவாக முடியும்?

சிறைச்சாலையிலே தாலமுத்து நடராசர்களின் பிணத்தைக் கண்டவர்—

பெரியாரைப் பெல்லாரி சிறைச்சாலைக்கு மாற்றுகிறீர்களே; அங்கு வெப்பம் அதிகமாயிற்றே என்று கேட்டபோது, 'அதுதான் நாயக்கருக்கு ஏற்ற சீதோஷ்ணம்!' என்று இறுமாப்போடு பதிலிறுத்தவர்—

அத்தகையவரின் படத்தைப் பார்ப்பதால் அருள் எப்படிப் பிறக்கும்?

போதுவாக அரசியல் கைதிகளை அநாகரிகமாக நடத்துவதற்கு ஆதரவளிக்கும் இந்த அரசாங்கம் ஒரு பேருண்மையை உணர்ந்து பார்க்க வேண்டும்.

சைப்ரஸ் தீவிலிருந்து மகாரியாஸ் பாதிரியாரை நாடு கடத்திய போது தொழிற்கட்சியின் மாஜித் தலைவர் ஆட்லி குறிப்பிட்டார்:

"நாம் நாடு கடத்தும் அரசியல் கைதிகள் ஒவ்வொருவரும் பிறகு காமன்வெல்த் நாட்டின் பிரதம மந்திரிகளாக நம்மோடு கை குலுக்குவதைத்தான் இதுநாள் வரை கண்டிருக்கிறோம்"

—என்று!

தூத்துக்குடித் தோழர் தங்கப்பழத்தை குஷ்டரோகியோடு விலங்கிட்டு, சாலை வழியாக நடத்திச் சென்று—

ஆசைத் தம்பியின் கேசத்தின்மீது ஆசை கொண்டு மொட்டை அடித்து—

எம். எல். ஏ. கோவிந்தசாமி மீது கொள்ளை வழக்கு ஜோடித்து—

—இன்னோரன்ன அநியாயங்களை, எதிர்க் கட்சிக்காரர்கள் என்னும் ஒரே காரணத்திற்காக செய்து மகிழ்பவர்கள் ஆட்லியின் பேச்சை ஆழ்ந்து படிக்க வேண்டும்.

பல்லக்கு தூக்குபவர்களுக்கு, ஒருநாள் பல்லக்கில் ஏறிச் செல்ல வேண்டுமென்ற ஆசைஅரும்பினால் அது ஆணவக்காரர்களுக்கு அழிவு தரும் அதிர்வேட்டாய் மாறிவிடும் என்பதையும் — அவர்கள் உணர்ந்து பார்க்க வேண்டும்!

★



மாகாணச்சீரமைப்பு மசோதாவைப் பற்றி சட்டசபை காங்கிரஸ் உறுப்பினர்கள் தங்கள் சொந்த அபிப்பிராயங்களைப் பேசுவதற்கு மாத்திரம் வாய் திறக்கலாமென்றும், மசோதாவை எதிர்த்து ஓட்டளிக்காமல் கையைக் கட்டிக் கொண்டிருக்க வேண்டுமென்றும் காங்கிரஸ் தலைமை கட்டளையிட்டிருக்கிறது.

சோகக்கதை!

செ.

உலகத்தின் முத்துச் சந்தை; முக்கடல் தாலாட்டும் செல்வத் தோட்டம்; தங்கம் விளையும் சிங்காரத் தாழ்வாரம் எங்கள் தாயகம்! இப்படிக் கீர்த்திமிசைக்கின்றார்கள் சரித்திரப் பஞ்சணையிலே உறங்கிக் கிடக்கும் நம் மூதாதையர்கள் கி. பி. இரண்டாம் நூற்றாண்டு திராவிடர்கள்! அந்த நாள் தென்னகத்தின் எழில்மிக்க காட்சியை மகிழ்ச்சி கொப்பளிக்கும் விதத்திலே தீட்டி — இதயத்திலே உணர்ச்சியலைகளை மீட்டி விடுகின்றனர் சரித்திர சிற்பிகள்.

★

வெள்ளை துரைமார்களின் 'சுரண்டல்' மாய்ந்தும் கூட அந்த நம் தாயகத்தின் அழுகுரல் ஓய்ந்தபாடில்லை; துயர் நீங்கக் காணோம்; துயர் துடைப்பதற்கென கச்சை கட்டி வந்தவர்களோ, கடிவாளத்தைக் 'கைமாற்றி'க் கொடுத்துவிட்டு கைகட்டி நிற்கவும், சட்டங்களை சிரமேற் தாங்கவும்; எடுபிடிகளாய்; ஏமாளிகளாய்; தென்னகத்தில் புதிய சுரண்டல் சக்திகளுக்கு ஆலவட்டம் வீசி, அன்னை தமிழகத்தை வடவரின் அடிமை பூமியாக்கி, 'மஞ்சள் ஏகாதிபத்தியத்தின்' ஏஜெண்டுகளாக நத்திக் கிடக்கும் கொடுமை நிறைந்த காட்சியை, கலங்கிய கண்களோடு கடந்த கால தமிழர் சரித்திரம் கவனித்துக் கொண்டிருக்கிறது.

அதிலும் தேக்கம் இங்கே; அலை தரும் முத்தும், மலை தரும் சொத்தும் வற்றி விடவில்லை இன்னும்! உலகத்தின் இதயத்தையே இன்று உலுக்கிக் கொண்டிருக்கும் அணு குண்டு; அதற்கான மூலப் பொருள் நம் தாயகத்தில்! மயிலும்-மலர் சோலைக் குயிலும் மதுரகீதம் இசைக்கும் வளமிக்க சோலைகள் — ஆனால் இன்று அந்த சுந்தரச் சோலைகளைச் சுற்றி வடநாட்டு வாணிபக்கழுகுகள்; பேராசை அலகுகளைப் பிளந்தபடி வட்டமிடுகின்றன.

ஏன் என்று கேட்க நாதியில்லை; எவர் நுழைந்தாலும் தடுக்க ஆளில்லை; கதவில்லாப் பாழ் வீடு போல கிடக்கிறது; நம் பசும்பொன் மண்டபம்!

கி. பி. 2-ம் நூற்றாண்டில் தமிழகத்தில் வழங்கிய நாணயங்களில்- அசோக முத்திரையல்ல! 'கடலாதிக்கம் தமிழரிடையில்' என்பதைக் காட்டும் 'பாய்மரக் கப்பல்' பொறிக்கப் பட்டிருந்ததாம்! பூரிப்போடு இதைக் குறிப்பிடுகிறார் பிளினி என்ற சரித்திர ஆசிரியர்.

தமிழ் மன்னர்களின் அத்தாணி மண்டபத்திற்கு அழகு சேர்க்க, ரோமாபுரியிலிருந்து வந்த வாணிபர்கள்; சித்திர முகங்களையும்-சீதள நிலவுகளையும் உடனழைத்து வந்தனராம்!

சரித்திரம் தீட்டிக் காட்டும் இத்தகைய எழிலோவியங்கள்; இன்று புகைப்பட்ட காட்சியாய்—புழுதி படிந்த ஓவியமாய் காணப்படுகிறது;

★

தங்கம் கொழிக்கும் தாழ்வாரம் இன்று தணல் வீசும் பாலைவனமாகக் கிடக்கிறது!

நாளைக்கொரு ஆலை; வளங்கொழிக்கும் திட்டங்கள்; வடக்கே கோபுரம் போல் வளர்ந்து கொண்டே இருக்கின்றன என்பதற்கு 'தேசிய' ஏடுகளே இன்று சான்று பகர்கின்றன.

ஆனாலும், இங்குள்ள இன வைரிகள் 'செயற்கை பாலம்' ஒன்றை 'ஏக இந்தியா' என்ற பெயரால் அமைத்து ஒற்றுமை கீதம் பாடிக் கொண்டிருக்கிறார்கள்!

சரிதம் உணர்ந்த வடக்கு மனிதர்களோ, சமயம் இதுதான் என்ற உள் நோக்கோடு தென்னகத்தின் வளத்தை எந்தெந்த வழிகளில் சூறையாட முடியும், வடக்கை லங்காஷையராக, மான்செஸ்டராக மாற்றிவிட என்னென்ன வழிகள் உள என்பதில் ஓயாமல் சிந்தையை செலவிட்டபடி இருக்கின்றனர்.

இந்த சூதாட்டத்திற்கு மத்திய சர்க்காரின் மறைமுகமான ஆதரவும் இல்லாமல் போகவில்லை!

வடக்கு 'குட்டி' அமெரிக்காவாக, குபேர புரியாக மாறுகிறது என்பதற்கு ஆயிரம் சான்றுகளோடு இதோ ஒன்று:

10 கோடி ரூபாய் செலவில் புதிய உருக்குசாலை ஒன்றை ரஷிய உதவியுடன் அமைப்பது என்ற திட்டத்தை டெல்லி சர்க்கார் ஏற்றுக் கொண்டு விட்டனராம்!

அத்தகைய பிரம்மாண்டமான உருக்குத் தொழிற்சாலை எங்கே துவக்கப்படுகிறது தெரியுமா?

மத்திய பிரதேசத்தில் பிலாய் என்னுமிடத்தில்! 110 கோடி ரூபாய் செலவில்! ஆண்டொன்றுக்கு 13 லட்சம் டன் உருக்குப் பொருள் தயாராகும் இதே அமைப்பு ஆண்டொன்றுக்கு 2 லட்சம் டன் தயாரிக்கின்ற அளவிற்கு விரிவாக்கப் படுமாம்!

இத்தகைய ஒரு பிரம்மாண்டமான தொழிற்சாலையை அமைப்பதற்கும், இயக்குவதற்கும் கிட்டதட்ட 500 ரஷ்ய நிபுணர்கள் அமர்த்தப் படுவார்களாம்!

★

இந்த மகத்தான துவக்க விழாவை தென்னகம் வரண்டு போயிருக்கும் உதடுகளைப் பிளந்து, வற்றிப் போன வயிற்றிலிருந்து வார்த்தைகளை வெளிக் கொணர்ந்து வாழ்த்து கூற இருக்கிறதோ தாநாமறியோம்!

அங்கே வளர்ச்சி; இங்கே வரட்சி; என்றாலும் வாய்மூடிக் கிடக்கின்றனர் ஆட்சித் தேரோட்டும் அரசியல் சாரதிகள்!

★

ஒரிசா மாநிலத்தில் ஹிராகுட் என்னும் இடத்தில் ஏழரைகோடி ரூபாய் திட்டத்தில் அலுமினியத் தொழிற்சாலையொன்றும் துவக்குவதற்கான ஏற்பாடுகள் முடியும்தருவாயில் இருக்கிறதாம்; ஆண்டொன்றுக்கு 20 000 டன் வரையில் உற்பத்தி விரிவாக்கப்படுமாம்; இத்தகைய ஒரு பெரிய தொழிற்சாலை 00 ஏகர் நிலப்பரப்பில், கனடாவின் கூட்டுறவோடு ஆரம்பிக்கப்படவிருக்கிறதாம்;

ஆனால் சென்னையில் ஒரு அலுமினியம் தொழிற்சாலை ஏற்படுத்தும் திட்டம் மத்திய சர்க்காரின் பரிசீலனையில் இருக்கிறதாம்! சட்டசபையில் நிதியமைச்சர் சுப்ரமணியனார் இப்படி குறிப்பிட்டிருக்கிறார்;

ஒரிசாவில் துவக்கவிழா நடைபெறுகிறது!

சென்னையில் துவக்குவது என்ற விஷயம் பரிசீலனையில் இருக்கிறதாம்!

அதுவும்—வடநாட்டு மத்திய சர்க்காரிடம்!

"நிதி வசதிகள் மட்டும் போதாது பெரிய தொழிற்சாலைகளை நிறுவுவதற்கு - இயற்கை வளங்களும் கிடைக்க வேண்டும்"—என்றும் குறிப்பிடுகிறார், அமைச்சர்!

தென்னகத்தில் எந்தத் தொழிற்சாலையை துவக்குவதற்கு இயற்கை இடையூறாக இருக்கிறது என்பதை அமைச்சர் தெளிவு படுத்துவார் என்று நாம் எதிர்பார்க்க முடியாது.

அமைச்சரின் இந்த வாதம் 'ஆடத் தெரியாதவள்—கூடம் கோணல்' என்ற சோகக் கதை போல் கேலிக்குரியதாக இல்லையா?

திருவாங்கூர்ப் பகுதிகளில் அணுசக்திக்குத் தேவையான 'யுரேனிய' தாதுப் பொருள்கள் கிடைக்கிறதாமே, என்று டெல்லி சட்டசபையில் உறுப்பினர் ஒருவர் கேட்டபொழுது;

'ஆம்' என்று குறிப்பிட்டதோடு, அதற்கான ஆராய்ச்சி நிலையம் ஒன்றை பம்பாயிலே விரைவில் துவக்குவதற்கான முயற்சியும் இருக்கிறது; என்று பண்டித நேரு குறிப்பிட்டிருக்கிறார்!

தொடர்ச்சி 10-ம் பக்கம்

தித்திக்கும் முத்தமிழ்ச் சுவையை எத்திக்கும் பரப்புவதற்குச் சித்திரைத் திங்கள் முதல் வெளிவர இருக்கும்
அறிவியல் ஏடு
"கலைக் கோயில்"
(திங்கள் இருமுறை) ஆசிரியர் "ரவி"
நேருக்கு நேர், அலைகடலுக்கப்பால், முத்துச் சிப்பி, மதுக் கிண்ணி, அசலும் நகலும், தேனருவி சிற்பியும் சிலையும்... இன்னோரன்ன பல்வேறு சுவைப் பகுதிகளுடன் செந்தமிழ்த் தாய்க்கு அணிசெய்ய வருகிறது.
தனிப் பிரதி அணா 2. ஆண்டுக் கட்டணம் ரூ. 4. மலர்களுடன்)
விபரங்களுக்கு:
"கலைக் கோயில்"
27, சப்பாணி கோயில் தெரு வடக்கு மாசிவீதி, மதுரை.
* முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் மட்டும் நிர்வாகிக்கு எழுதும்படிக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
* தனித் தமிழில், புதிய இனிய கருத்துகள் நிறைந்த, அறிவியல் எழுத்தோவியங்கள் வரவேற்கப் படுகின்றன.

கதையல்ல—வரலாறு!

இரு காதலர்கள்

பி.சி.கணேசன். பி.எஸ்ஸி:பி.டி.

பதினெட்டு வயதே நிரம்பப் பெற்ற பேரழகன் கியாஸ்-உத்-தீன் தக்காணத்தில் அரியணையில் அமர்ந்து கோலோச்சி வந்தான். தந்தை இறந்தபின் அவன் அரியணை ஏறி சில மாதங்களே ஆகியிருந்தன. தந்தையின் நெறியினைப் பின்பற்றி தன்னுடைய குடும்பத்தை ஆதரித்தவர்களுக்கு— தன் ஆட்சியிடம் விசுவாசம் காட்டிய ஓய்ராக்களுக்கு — விருதுகளையும், வெகுமதிகளையும், பதவிகளையும் வாரி வழங்கினன். இந்தச் செய்கை லால்ஷீன் என்ற துருக்கிய அடிமை ஒருவனிடம் மனவெறுப்பை ஏற்படுத்திவிட்டது. கியாஸ்-உத்-தீன் ஆட்சிப் பொறுப் பேற்றவுடன் தன்னுடைய அடிமை என்ற நிலை அகலறு, அந்தஸ்து உயருமென்று எதிர்பார்த்து ஏமாந்தவன் அவன். ஆகவே, சமயம் ஏற்பட்டபொழுதெல்லாம், மன்னனிடம் அவனுக்கு ஏற்பட்டுள்ள வெறுப்பைக் காட்ட அவன் தவறியதே இல்லை.

"லால்ஷீன், நான் ஆட்சிபீடம் ஏறியபின் எல்லோருடைய உள்ளத்திலும் மகிழ்ச்சி நிரம்பியிருக்கும் பொழுது, நீ மட்டும் அதற்கு விதிவிலக்காக அதிருப்தியோடு காட்சியளிப்பானேன்?" — கியாஸ்-உத்-தீன் அடிமையிடம் அன்போடு கேட்டான்.

"அடிமை யென்ற முத்திரையோடு உலவுகின்றவனுக்கு உரிமைகளைப் பற்றிப் பேச உரிமையேது? ஆனல், உண்மை ஊழியர்கள் உதாசீனம் செய்யப்படுபோது அதை எடுத்துக் கூறும் உரிமையாவது ஒரு அடிமைக்கு வேண்டாமா?" லால்ஷீன் உள்ள உணர்ச்சிகளை அப்படியே வெளியே கொட்டினன்.

"நீதியிலிருந்து பிறழா மன்னனின் அடிமைக்குப் பேச்சுரிமை ஏன்? அடிமைகளை அரசிளங் குமாரர்களாக மதித்து நடத்த நான் ஒப்பமாட்டேன்..."

"நீதிக்கும் அடக்குமுறைக்கும் உள்ள வேறுபாட்டினை உணர்ந்து பாராட்டும் அளவுக்காவது அவர்களிடம் உள்ளம் இருக்கிறது என்று உணர்ந்து அவர்களை நடத்தவேண்டாமா?"

"அடிமை ஒருவனை சுதந்தர மனிதனுக்கு இணையாக வைத்து ஒப்பநோக்குவது அநீதி என்று நான் கருதுகிறேன். அடிமையென்ற விலங்கினை உனக்கு அணிவித்து மகிழ்வது மனிதனல்ல; விதி, லால்ஷீன் விதி! ஆண்டவன் பிறப்பித்த கட்டளையை மாற்ற அரசனுக்கு உரிமையேது?"

"அரசர் தானும் ஒரு அடிமைப் பெண்ணைத் தாயாகக் கொண்டவர் என்பதை மறந்துவிட்டார் போலிருக்கிறது...!" தக்காணத்தை ஆண்டுவரும் வம்சம் அடிமை வம்சம் என்டதையே லால்ஷீன் குத்திக் காட்டிப் பேசினன்.

"பெண் வழியால் அரச வம்சம் மாசுபடுவதில்லை, லால்ஷீ! அரசாளும் உரிமையையும் செங்கோலேந்தும் சிறப்பினையும், தாயிடமிருந்தல்ல, தந்தையிடமிருந்தே மன்னன் பெறுகிறன்..." மன்னன் வெருளாமல் விநயமாகப் பதிலளித்தான்.

"வேந்தர்களின் விவேகத்தின் முன் அடிமைகளின் அறிவு எம்மாத்திரம்...!" பொங்கியெழும் கோபத்தை வெளிக்காட்ட இஷ்டப்படாமல் உள்ளத்தில் கருவிக் கொண்டே லால்ஷீன் பேசினன்.

"லால்ஷீன், நீ நன்ருகப் புரிந்துகொள்! அடிமைகள் அரச போகத்தில் பங்கு பெறக் கனவு காண்பது மதியீனம். உன் ஆசைக்கு ஆலவட்டம்வீச நான் தயாராக இல்லை!" கியாஸ்-உத்-தீன் முடிவாகக் கூறிவிட்டு எழுந்தான்.

லால்ஷீன் காலஞ் சென்ற மன்னனின் அன்புக்குப் பாத்திரமானவன் இதர அடிமைகளுக்கில்லாத சிறப்புகளும் விசேஷ சலுகைகளையும் அவன் அனுபவித்து வந்தான். மன்னன் முன்னிலையிலேயே தன் மனதில் பட்ட எண்ணங்களைக்கூறிடும் உரிமையையும் அவன் பெற்றிருந்தான். லால்ஷீனின் அறிவுக் கூர்மையையும் காரியம் சாதிக்கும் திறனும் அவனிடம் எல்லோருக்கும் மதிப்பைத் தேடிக்கொடுத்திருந்தன. கியாஸ்-உத்-தினின் பேச்சு லால்ஷீனின் வெந்த உள்ளத்தை வேல்கொண்டு குத்தியது. அடிமையென்ற நிலை தன்னுடைய லட்சியப் பாதையில் பெரும் தடைக்கல்லாக நிற்பதை யெண்ணி மனம் நொந்தான். அடிமையென்ற மாசு களையப்பட வேண்டுமென்ற ஆசை வஞ்சம் தீர்க்கும் எண்ணமாக அவன் உள்ளத்தில் உருவெடுத்தது. 'அடிமை அரசபீடம் ஏறும் அந்தஸ்தை ஏன் பெறக்கூடாது?' என்ற கேள்வி அவன் உள்ளத்தில் ஊடுருவிப் பாய்ந்து சிந்தனையைக் கிளப்பியது. ஏதோ ஒரு முடிவு கண்டு அம்முடிவு நோக்கித் தன் முழு சக்தியையும் பிரயோகிப்பது என்று முடிவு செய்தான்!

லால்ஷீனுக்கு ஆகா என்று ஒரு மகள் இருந்தாள், அழகுப் பொக்கிஷம் அவள்! கண்டோரின் கருத்தையுண்ணும் வண்டு விழிகளும் பவள உதடுகளும் பார்ப்போரை பரவசப்படுத்தும் முத்துப் பல் வரிசையும், மதுக் கலசங்களொத்த மதர்த்த மார்பகங்களும் கார்மேகத்தைப் பழிக்கும் கருங்கூந்தலும், நடக்கும் பொழுது நெளிந்து அழகுபடுத்தும் சிற்றிடையும்...ஆகாவின் அழகு பற்றி தக்காணம் மட்டுமல்ல; தரணி பெங்குமே மக்கள் பேசி வியந்தனர். பூமண்டல மெங்குமே போற்றித் துதி பாடிடும் அவள் அழகைப் பற்றி மன்னன் கியாஸ்-உத்-தீனும் கேள்விப் பட்டிருந்தான் ஆனல் அவளை அவன் நேரில் பார்த்ததில்லை!

ஆகா, அழகி மட்டுமல்ல; கலைவிற்பன்னள் அவள் யாழினைக் கையில் எடுத்து விட்டால் போதும். ஏழிசை வாணரும் வெட்கித் தலைகுனிந்து நிற்பராம் அவளுடைய இசைத்திறம் கண்டு. யாழினை அவள் இசைக்கும் பொழுது அண்ட சராசரமும் அந்த இசையிலே லயித்து ஒன்றிக் கலந்து விடுமாம். அழகும் கலையுணர்ச்சியும் ஒன்ருேடொன்று போட்டி போட்டுக் கொண்டு சிறந்து விளங்கின. மகளின் பெருமையை ஒரு கணம் எண்ணிப் பார்த்த லால்ஷீனுக்குத் திடீரென்று ஒரு எண்ணம் தோன்றியது!

லால்ஷீன் மன்னர்களின் மனோபாவங்களை எடை கட்டி நிதானித்து வைத்திருப்பவன், கரையுடைத்து வரும் காவலர்களின் கோப வெள்ளத்தைக் கட்டழகியின் ஒரு கண் வீச்சு தடுத்து நிறுத்திவிடும் என்பதை அவன் அறிவான். அகம்பாவத்தின் உருவமாக நடமாடிடும் மன்னர்களெல்லாம் ஆரணங்குகளிடம் பல்லிளித்துக் கிடப்பதை அவன் பார்த்திருக்கிறுன். பெரும் சாம்ராஜ்யங்களைக் கட்டியாண்ட சக்கரவர்த்திகளெல்லாம் சரசாங்கிகளின் சல்லாபத்தில் அறிவிழந்து நாடுகளைக் கோட்டை விட்ட வரலாறுகளைப் படித்திருக்கிருன்...இப்படி எத்தனையோ விஷயங்களை எண்ணிப்பார்த்தான் லால்ஷீன்!

ஆம்; இனி ஆகா அந்தப்புரத்தில் உட்கார்ந்து யாழினை இசைக்க மாட்டாள்! மன்னனின் இதய யாழினை மீட்டி அவனுக்கு இன்பமூட்டுவாள்!

இனி அறையிலே அவள் ஆடமாட்டாள். கியாஸ்-உத்-தீனின் இதய அரங்கில் ஆடுவாள்; அவனை பம்பரமாக ஆட்டுவாள்!

ஆகா, பேரழகி ஆகா, இனி வெறும் அடிமைப் பெண்ணுக இருக்கக் கூடாது. தக்காணத்தின் அரியணையில் அவள் பட்ட மகிஷியாக வீற்றிருப்பதைத் தானும் பார்த்து மகிழ வேண்டும் என்று முடிவு செய்தான் அடிமை லால்ஷீன். திட்டங்கள் உருவாயின!

★

ஒரு நாள் மன்னன் கியாஸ்-உத்-தீனும் அரண்மனை நந்தவனத்தில் தனியாக உலவிக்கொண்டிருந்தனர். மன்னனுக்குப் பதினெட்டு வயது; அவனுடைய தம்பிக்கோ வயது பதினறு. இருவரும் கட்டிளங் காளையர். கன்னியரின் இதயங்கவரும் கட்டழகர்.

மலர்வனத்தில், சற்று தூரத்தில், மானென மருட்சியும் மயிலெனச் சாயலும் கொண்ட பெண்ணொருத்தி மெதுவாக அசைந்தாடிச் செல்வதை இருவரும் கண்டனர்.

"அதோ, அந்தப் பளிங்குக் குளத்தருகே செல்லும் அழகி யாரென்று உனக்குத் தெரியுமா தம்பி?"—மன்னன் இளவலைப் பார்த்துக் கேட்டான்.

"யாரென்று தெரியவில்லை. ஆனல் ரசித்து மகிழவேண்டிய உருவம் என்பது மட்டும் தெரிகிறது." என்று கூறினன். ஷம்ஸ்-உத்-தீன், பாவையின் மீது பதித்த பார்வையைத் திரும்பப் பெறுமலேயே!

"தம்பி. அந்தப் பெண்ணழகி கண்ணிலிருந்து மறையுமுன்பே, அரசர் அவளிடம் பேச விரும்புகிறுர் என்று கூறி நிறுத்து; ஊம், சீக்கிரம் போ!"

ஷம்ஸ்-உத்-தீன் விரைந்து அவள் பின்னேபோய், "அழகி, உன்னேடு அரசர் ஓரிரு வார்த்தைகள் பேச விரும்புகிருர்," என்ருன். அவள் திரும்பி. அவளுடைய பேரழகை அவனுடைய கண்களுக்கு விருந்தாக்கினுள். அவனும் அவளுடைய அழகை இமை கொட்டாமல் பார்த்து ரசித்து மகிழ்ந்தான். கியாஸ்-உத்-தீனும், அருகே வந்தவுடன் அவளுடைய அழகு வெளிச்சம் கண்களைக் குருடாக்க அப்படியே பிரமித்து நின்ருன்.

இருவரையும் விழிக் கோணத்தால் பார்த்து விந்தை பல காட்டி நின்ருள் அழகி ஆகா!

"என் கண் முன்னல் நிற்கும் அழகுத் தேவதை யார்?" மன்னன் கேட்டான்.

"தங்களுடைய அடிமை மகள், ஆகா!" முத்துப் பற்கள் முறுவலிக்க—செம்பவழ வாய் திறந்து சொற்களை உதிர்த்தாள்.

"இப்பேர்ப்பட்ட அழகி ஒருத்தியை மகளாகப் பெற்றவன், அடிமை யென்ற பெயரோடு உலவுவது நம் நாட்டிற்கே பெருத்த அவமானம். இந்த நிமிஷத்திலிருந்து உன் தந்தை அடிமையல்ல; எல்லோரையும்போல் சுதந்திர மனிதன்"—கன்னியின் கட்டழகைக் கண்டமாத்திரத்திலேயே மன்னன் கட்டளை பிறப்பித்து விட்டான்!

"மகராஜ், மாளிகையின் மலர்வனத்தில் உத்திரவின்றி உள்ளே நுழைந்து தங்களின் தனிமைக்குப் பங்கம் விளைத்தமைக்காக அடியாளை மன்னிக்க வேண்டும்"

"அபச்சாரம், ஆகா, அபச்சாரம்! உன்னைப்போன்ற சிந்தை கவரும் சிற்றிடை அழகிக்கு செங்கோலையே பணயம் வைக்க புவியாளும் பூமான்களெல்லாம் போட்டி போட்டுக் காத்துக் கிடப்பார்களே! ஆகா, மலர்வனம் மட்டுமென்ன? மாளிகையில் உன் இஷ்டம்போல் நீ எங்கு வேண்டுமானுலும், எப்பொழுது வேண்டுமானுலும் சென்று வரலாம். உன் பாததூளி பட்டு என் மாளிகை பெருமையடையக்கூடாதா? ஆகா!" என்று கூறிக்கொண்டே மன்னன் அவள் மலர்க் கரங்களைப் பற்றினன். அவள் அன்போடு கரங்களை மெதுவாக விடுவித்துக்கொண்டு ஓடி மறைந்தாள்!

கியாஸ்-உத்-தீனும், ஷம்ஸ்-உத்-தீனும் அவள் சென்ற திக்கையே வெறிச்சென்று பார்த்துக்கொண்டு நின்றனர். தனக்கு ஒரு அரியணை இருந்தால் ஆகாவை ராணியாக்கி, அருகில் அமர்த்திப் பெருமைப் படவும் தயாராய் இருந்தான் ஷம்ஸ்-உத்-தீன்! ஆனல் மன்னன் கியாஸ்-உத் தீனின் மனநிலையோ வேறு விதமாக இருந்தது! ஆகா! எவ்வளவு அழகியாக இருந்தாலும் அவள்

★ தொடர்ச்சி 8-ம் பக்கம்

★ முகமும்-மீசையும்! ★

"அதோ போகிருள் பார்: அந்தப் பருவ மயில் அடடா...... தங்கமப்பா தங்கம்! நிறத்திலே மட்டுமல்ல; குணத்திலும்! முடுக்கி விட்ட மௌனப் பதுமைபோல வீதியிலே நடைபழகுகிருளே என்று எண்ணுதே-ஏமாந்து போவாய்! அந்த எழிலரசி, தன் கோவைஇதழ் அசைத்துவிட்டால் பலாச்சுளையின இனிமை-பச்சைக் கிளி மொழியின் அழகு-எதுவுமே எதிர் நிற்க முடியாது நீல வானத்தை உடையில் காட்டி, நிலவை முகத்தில் காட்டி அசைந்தாடிச் செல்கின்ற அவளை அணுகுவோமா என இதயத்தில் ஆசையைத் தேக்காதே — அப்போது அவள் நெருப்பாகி விடுவாள்.

இத்தனைக்கும் அவள் ஒரு வேலைக்காரி! அடிமை. அழகாபுரி ஜமீன்தாரின் அரண்மனையிலேயுள்ள அடிமைகளுக்கு அவள் தான் தலைவி அழகில் முதல்வி. ஒரு ஆசைக்காரனின் புதல்வி. ஆயிரம் ரூபாய் விலைக்கு அவள் விற்கப்பட்டாள் அழகாபுரிச் சீமானுக்கு! அரண்மனையில் காமரசக் கேளிக்கைகளுக்கென அணி வகுத்து நின்ற படைவரிசை தெவிட்டிவிட்ட நேரத்திலேதான் இந்தத் தேனமுதைத் தேர்ந்தெடுத்தார் ஜமீனதார்! ஆனல் முடிவோ வேறு!—அப்பன் பணம் பெற்றுச் சென்றுவிட்டான் அருமைமகளை விலை கூறிவிட்டு-அடிமையாக்கி விட்டு!

மகளோ—மானம் பெரிதென்கிருள். மாளிகையில் சரசப் பதுமையாக வாழமாட்டேன் எனப் போர்க்கொடி உயர்த்துகிருள். அங்குள்ள அடிமைப் பெண்கள் அனைவரையும் தன்பக்கம் சேர்த்துக்கொண்டு சீமானின் போகச் சேனையாக இருந்த அவர்களை சீறும் புலிக்கூட்டமாக மாற்றியிருக்கிருள்.

எவ்வளவு நல்லவள் — இவ்வளவு திறமைசாலி—ஒரே ஒரு தீய குணத்தை மட்டும் பெற்றிருக்கிருள்."

"தீய குணமா? என்னப்பா அது?"

"அவள் ஒருவனைக் காதலிக்கிருளாம்!"

"அதனுல் என்ன— அந்தக் காதலன் தீயவனு? — அல்லது உன் அகராதிப்படி காதல் என்பதே தீய பண்பா?"

"அப்படியொன்றுமில்லை. அவள் காதலன்கூட இந்தக் கலாப மயிலுக்கேற்ற ஜோடிதானும். அழகனும்—அன்பு வடிவினனும்!"

"பிறகென்ன?"

"அவனேடு சேர்ந்து வாழ வேண்டுமென்று அவள் முடிவு செய்துவிட்டாளாம்."

"அது குற்றமா?"

"அதுமட்டுமல்ல: ஜமீன்தார் மாளிகையை விட்டு வெளியேறி விடவே தீர்மானித்துவிட்டாளாம். தான் மட்டுமல்ல; தன்னைப்போல அங்கு அடிமையாக்கப் பட்டிருக்கும் ஆரணங்குகளும் விடுவிக்கப் பட வேண்டும் என்று கிளர்ச்சி செய்கிருளாம்!"

"ஜமீன்தார் என்ன சொல்கிருர்?"

"அவர் என்ன சொல்லுவார்— ஆயிரம் ரூபாய் போட்டு வாங்கியிருக்கிருர். அவள் தனக்கு உடமைஎன்கிருர். பழரசமும்-அதனினும் இனிப்பான பருவரசமும் வழங்கியபடி தன்னை வட்டமிட வேண்டும் அந்த வானம்பாடி என்கிருர்."

"அவளோ மறுக்கிருள், விடுதலை விரும்புகிருள் — இதைப் பற்றி நீ என்ன நினைக்கிருய்?"

"நான் வெறுக்கிறேன்!"

"ஜமீன்தாரைத்தானே!"

"இல்லை, இந்தப் போக்கை மட்டும்! என்னதான் நல்லவளாயிருந்தாலும், ஜமீன் குடும்பத்தில் ஆண்டாண்டு காலமாய் அழலில் இருந்து வரும் அடிமை முறையை ஒழித்து ஜமீன் குடும்பத்திலே யுள்ள ஒற்றுமைக்கு ஊனம் உண்டாக்கலாமா?"

"என்னப்பா உன் பேச்சு புதிராயிருக்கிறது, அழகு தேவி—அன்புக்கரசி—என்றெல்லாம் வர்ணித்தாய். அவள், அரண்மனை பூதத்தின் காமக்கரங்களிலேயிருந்து விடுபட்டு வெளியேற வேண்டுமென்று விரும்புகிருள்: அதை மட்டும் வெறுக்கிறேன் என்கிருய்! உன் போக்கு புரியவில்லையே எனக்கு!"

"இவளைத் தவிர எல்லா அடிமைகளும் ஜமீன்தார் இஷ்டப்படி நடந்து வந்தார்கள். இவள் அவர்கள் அனைவரையும் கலைத்து ஜமீனில் பெரிய குழப்பத்தையே உண்டாக்கி விட்டாள். என்னதான் இருந்தாலும் ஜமீனில் ஒரு குழப்பம் என்ருல் மனம் சங்கடப்படுகிறது பார்!"

"ஜமீனில் குழப்பம் - உனக்கேன் சங்கடம் தருகிறது?"

"சரிதான் போ! நான் ஜமீன் சொத்துக்கு சொந்தக்காரனுகக் கூடிய ஜாதகமிருக்கிறது என்று நேற்றுத்தானே ஆருடக்காரன் சொன்னுன். திடீரென்று கிழ ஜெமீன்தார் கடையை மூடி விடுவார். அதிர்ஷ்டம் எனக்கு அடிக்குமென்று ரேகை பார்ப்பவர்களெல்லாம் கூறுகிருர்கள். "ஏடு" படிப்பவர்களெல்லாம் எழுதியிருக்கிருர்கள். கிரக பலன் அப்படித்தான் இருக்கிறதாம்! ஒரு வேளை, அதிர்ஷ்டச் சக்கரம் அப்படி சுற்ற ஆரம்பித்து ஜமீன்தாராக நான் ஆகிவிட்டால் — அப்போது அந்தப்புரத்தில் அடிமைகளின குழப்பம் அவர்களது விடுதலை முழக்கம்—இன்னோரன்ன இடையூறுகள் எழக்கூடாது பார்! அதற்காகத்தான் முன் கூட்டியே எச்சரிக்கையாக இருக்கிறேன்; இதுபோன்ற அடிமைகளின் விடுதலை கீதத்தை இபபோதே ஆதரிக்காமல் இருந்தால்தான் ஜமீன் பதவி கிடைதத பிறகு—சந்தோஷம் நிலைக்கும்! சரசம்—சல்லாபம் எல்லாம் நீடிக்கும்—பதவி பூரண ஆயுள்பெறும்! அல்லாமல், அடிமைகள் எல்லாம் இப்போதே விடுதலை பெற்றுப் போய் விட்டால்—நான் ஜமீன்தாரான பிறகு சப்ரகூட மஞ்சம் வெறிச் சென்று கிடக்குமே! கால் பிடிக்க, கை அமுக்க தோள் தழுவ, துவண்டு விழ—தோகையர் தொகை தொகையாக உள்ளனர் இப்போது ஜமீன் மாளிகையில்! நான் செல்லும் போது அந்த இடம் காலியாக இருக்கக் கூடாதே—அதற்காகத்தான் தோழனே சொல்லுகிறேன்; அந்த அடிமைப் பெண்ணின் விடுதலை விருத்தம் வெறுப்புக்கு உரியது என்று! இப்போது புரிகிறதா?"

"சரியான ஆளப்பா நீ! யாரோ ஆருடக்காரன் அவிழ்த்து விட்ட பொய் மூட்டைகளை நம்பி-கனவிலும் சந்திக்க முடியாத கற்பனை ராஜ்யத்தை சிருஷ்டித்துக் கொண்டு வீணே அலட்டிக் கொள்கிருய் — என்று மில்லாத வகையில் அந்த ஏழெடுக்கு மாளிகைக்கு சிபாரிசு பேசுகிருய். அழகியாம்—ஆனல் அவள் அடிமையாயிருக்க வேண்டுமாம். வெகு நன்று உன் வியாக்கியானம்!"

"எங்கே போகிருய் சொல்வதைக் கேளப்பா—நான் ஜமீன்தாராகப் போவது நிசசயம் உண்மை! ஒனபதாம் மடத்தை நோக்கி ராஜா புறப்பட்டு விட்டான் என் ஜாதகத்தில்!"

"ஒன்பதாம் மடத்தை நோக்கி ராஜா புறப்பட மாட்டான்—உன்

னைப் போல என்னைப் போ ஆண்டிதான் புறப்படுவான்— சரி நான் வருகிறேன். இங்கி தால் எனக்கும் பைத்தியம்பிடி விடும்."

நண்பன் போய் விட்டா ஜமீன் மாளிகை பற்றி க காணும் அன்பனும் பெருமூச் னும், ஒரு அலட்சிய சிரிப்புட அதை விட்டு நகர்ந்தான்.

★

மேலேயுள்ளள நிகழ்ச்சி கற்பனையா? உண்மையில் நடந்ததா? என எண்ணத் தோன்றும் உங்களுக்கு! கற்பனைதான் எனினும் உண்மை விளக்கம் தருவதற்காக தீட்டப் பட்ட உரையாடல் அது! இந்தப்பக்கத்தில் மேலே காணப்படும் கேலிச் சி ரம் மார்ச் 21ம்நாள் சுதேசமித் னின் முனபக்கத்தை அலங்கரி தாகும்; சோஷலிஸ்ட் கட்சி தலைவர் டாக்டர் லோகி அவர்கள் திராவிட முன்னேற் கழகம் பற்றித் தந்துள்ள துரையை வைத்து தீட்டப் சித்திரமாகும் அது!

சித்திரத்தின் கீழே :-

"திராவிட முன்னேற்றக் கழகத்தில் சிற்சில நல்ல அம்சங்கள் இருப்பதாக டாக்டர் லோகியோ கூறுகிருர். சமத்துவத்துக்காக அந்தக் கழகம் போராடுவது போற்றத் தக்கது தான்.

ஆனல் அக்கழகம் தேசீய ஒற்றுமைக்கு வெடிவைக்கும் முயற்சியைத் தாம் வெறுப்பதாக டாக்டர் லோகியா பேசியுள்ளார்"

என்றும் மித்திரன் குறிப்பிட்டுள்ளது.

அதைப் படித்த போதுதான் நாம் மேலே தீட்டிக் காட்டியுள்ள உரையாடல் நினைவுக்கு வந்தது.

"அழகிதான்— ஆனல் ஒரு குறை: அடிமையாக இருக்க மறுக்கிருள்"

என - ஜமீன் கனவு கண்டவன் கூறுவதற்கும், டாக்டர் லோகியா பேசியதாக மித்திரன் குறிப்பிட்டிருப்பதற்கும் அதிக வேறுபாடு இருப்பதாக நமக்குத் தெரியவில்லை. தேசம்-தேசீயம் என்று பேசுகிறவர்கள் ஒன்றை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். இந்தியா ஒரு தேசம் என்பது அவர்களது கருத்து! அதை மறுத்துரைக்கும் நாமோ-இந்தியா ஒரு உபகண்டம், அதில் திராவிடம் ஒரு தனி தேசம் என ஆதாரப் பூர்வமான விளக்கங்கள் தந்து வருகிறோம். திராவிட தேசீயத்தின் ஒற்றுமைக்குப் பங்கம் வராதவகையிலே நடந்துகொள்ள வேண்டுமென்ற நல்லுரை பகரும் அணியிலே இருப்பவர்கள் நாம்!

லோகியோ போன்றவர்கள்—திராவிடம் என்றென்றும் இந்தியத் துணைக் கண்டத்திலே ஒரு அடிமையாகவே வாழவேண்டும் எனக் கருதுகிறவர்கள்.

ஜமீன்தார், அடிமைப் பெண்ணின் அழகைப் புகழுகிருன்; அம்சதூளிகா மஞ்சத்திற்கு அழைப்பு விடுத்தபடியே!

அவள் அங்கேயே அடிமையாக இருப்பதுதான் நல்லது என நவில்கிருன், ஜமீன்தாராகப் போகிறோம்என்று ஆருடம் கேட்டவன்.

இதுதான் இன்றைய அரசியலில்! தற்போதைய ஜமீன்தாராக நேரு — ஆருடம் கேட்டவராக லோகியா — அடிமை விலங்கொடிக்கத் துடிக்கும் தோகையாக திராவிட விடுதலை இயக்கம்.

இந்த இயக்கந்தான் தேசீய ஒற்றுமையைக் குலைத்து விடுகிறது என்று லோகியாக்கள் பேசுகிருர்கள். நம்மீது குற்றஞ் சாட்டுகிருர்கள்.

"அழகி — ஆனல் அடிமை வாழ்வை வெறுக்கிருள், அதனுல் அவளைப் பாராட்ட முடியவில்லை"

என அங்கலாய்க்கிருன் — உரையாடலில் ஒரு நண்பன்!

"கழகத்தின் சமத்துவக் கொள்கை மெத்த சிறந்தது. ஆனல் பிரிவினை முழக்கம் வெறுக்கத்தக்கது"

என்ற கருத்தை வெளியிடுகிருர் லோகியா!

அதையொட்டி சித்திரம் தீட்டிய மித்திரனும், சித்திரத் தலைப்பிலே **"உங்கள் மீசை பிடிக்கிறது, ஆனல் முகம் பிடிக்கவில்லை!"** என்ற வாசகத்தை அமைத்திருக்கிறது.

சித்திரத்திலே தி மு. கழகத்தை **அண்ணவாகவும், லோகியா**வை ஒரு பெண்ணுகவும் உருவகப் படுத்தியிருக்கிறது மித்திரன். படத்தைக் காணும்போதே, மித்திரன் லோகியாவைப் புரிந்து கொண்ட அளவுக்கு அண்ணவை—தி.மு. கழகத்தைப் புரிந்துகொள்ளவில்லை யென்பது தெளிவாகிறது.

லோகியாவின் முகம் அமைந்த அளவுக்கு அண்ணுவின் முகம்—ஏன் சாயல்கூட அதிலே விழவில்லை, மித்திரனுர், நமது முகத்தை மட்டுமல்ல, அகத்தையும் சரியாகத் தெரிந்து கொள்ளாதவர். அதனுல்தான் போலும் "முகம் பிடிக்க வில்லை" என்று ஒரே வரியில் கூறி விட்டார்.

நமது முகத்தை ஏறெடுத்துப் பார்க்கவே மித்திரன் வர்க்கத்திற்குப் பயம். அவ்வளவு அட்டுழியங்களை நாட்டிலே நடமாட விட்டு, குற்றவாளிக் கூண்டிலே நின்று தீர வேண்டிய நெருக்கடியான நேரத்தை நெருங்கிக் கொண்டி நக்கும் சூழ் நிலை அல்லவா ஆரிய வட்டாரத்திலே மலர்ந்திருக்கிறது. அதனுல்தான் நம்மை நிமிர்ந்து பார்க்க அஞ்சி நமது முகத்தைப் பற்றிய தவருன அபிப்பிராயத்தை வெளியிடுகிருர்கள்; மீசையை மட்டும் இருட்டில் தடவிப் பார்த்தவர்கள் போல!

ஒரு வேளை மித்திரனுர், நேரடியாக நம்மைத் தாக்காமல் தாக்கி, தோழர் லோகியாவையும் கிண்டல் செய்கிருரோ எனனவோ? நாமறியோம்! "லோகியா! அவர்களே! தி. மு. கழகத்தின் சமத்துவக் கொள்கைகள் பிடிக்கின்றன அவர்களது பிரிவினைக் கொள்கை மட்டும் பிடிக்கவில்லை யென்பது எதைப்போ லிருக்கிறது என்ருல்; மீசை பிடிக்கிறது முகம் பிடிக்கவில்லை என்பது போலிருக்கிறது!"

இதைப் போல லோகியாவுக்கு மித்திரன் பதில் கூறுகிறது போலும்! மித்திரன் நினைப்பது போல நமது முகம் அவலட்சணமானதல்ல! சாதி பென்னும் படையோ—சமயமென்னும் பருக்கூட்டமோ—கடவுள் மதம் என்ற காயங்களோ நமது முகத்தை விகாரப்படுத்தியது கிடையாது.

சாஸ்திரமென்னும் சளிபொழுகும் மூககு—பக்தி பென்னும் பஞ்சடைந்த கண்கள்—இதிகாசமெனும் இளித்த வாய் - சொர்க்க நரக நம்பிக்கை பென்ற சொத்தைப் பற்கள் கொண்டதல்ல நமது வதனம்!

மயக்கும் மாம்பழக் கன்னமில்லா விட்டாலும் மனம் வெறுக்கு மளவுக்கு மருவும், பருவும் நிறைந்ததல்ல! சுழற்றிப் பிடிக்கும் விழிகள் இல்லா விட்டாலும்—சுதந்திர ஒளி வழங்கும் கண்கள் கொண்டதுதான் கழகத்தின் முகம். புலி நிகர் வீரரை சாய்க்கும் கிளி மூக்கு இல்லா விடாலும்—எட்பூ அனைய எழில் நாசி கொண்டதுதான் தமிழ் மூச்சை சுவாசிக்கும் எமது இயக்கம்.

லோகியாவோ சமத்துவக் கொள்கை மட்டும் பிடிக்கிறது என்கிருர். மித்திரனே அந்தக் கொள்கையை மீசைக்கு சமானம் என்று சித்திரம் வரைந்து காட்டுகிறது!

லோகியாவுக்கு — நமது நாட்டுப் பிரிவினை முழக்கம் வெறுப்பைத் தருகிறது என்கிருர்.

மித்திரனே நமது பிரிவினை முழக்கத்தை பிடிக்காத முகத்துக்கு ஒப்பிட்டுப் படம் போடுகிறது,

ஆரிய வர்க்கம் மீசை வளர்க்காத வர்க்கம். ஆம்; மித்திரனின் ஒப்புவமையின்படி சமத்துவக் கொள்கையை வளர்க்காத வர்க்கம்.

அதனுல்தான் போலும், சமத்துவத்தை வழிபட்ட பாரதியாருக்கு முகத்திலே மீசை யிருந்தது!

நாட்டுப் பிரிவினையை முகத்திற்கு ஒப்பிடுகிறது மித்திரன்.

லோகியாவுக்கு ஜாடையாகக் குறிப்பு காட்டுகிறது போலும்!

"எண் சாண் உடலுக்கு தலையே பிரதானம், அந்தத் தலை போலத்தான் திராவிட முன்னேற்றக் கழகத்தார் தங்கள் கொள்கைகளுக்கெல்லாம் பிரதானமாக நாட்டுப் பிரிவினை என்கிற கொள்கையை வைத்திருக்கிருர்கள். அதைப்போய் வெறுக்கிறீர்களே" என்று லோகியாவைக் கிண்டல் செய்வதாகவுமிருக்கலாம். அல்லது "கழகத்தின் முகமே (அரசியல் கொள்கை) சரியில்லாத போது மீசையை (சமத்துவ கொள்கை) மட்டும் பாராட்டுகிறீர்களே — பாராட்டலாமா? — பாராட்டக் கூடாது!" என்று லோகியாவுக்கு புத்தி கூறுவதாகவுமிருக்கலாம் சித்திரத்தின்நோக்கம்.

டாக்டர் லோகியா—பிரஜா சோஷலிஸ்டு கட்சியிலிருந்து பிரிந்தவர். கிருபளானி, அசோக் மேதா, நரேந்திரதேவ் போன்ற தலைவர்களிடமிருந்து பிரிந்தவர்

★ தொடர்ச்சி 12-ம் பக்கம்



நமது பொதுச் செயலாளர், இரா. நெடுஞ்செழியன் அவர்களும், 'போர் வாள்' ஆசிரியர் காஞ்சி மணிமொழியார் அவர்களும், 6-3-56-ல் வாலாஜாபாத் இந்துமத பாடசாலையைப் பார்வையிட்டபோது எடுக்கப்பட்டது.



பிப்ரவரி 20-ந் தேதியன் டியில் துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்ற இடத்தை ல் தோழர்கள் ஈ. வெ. கி. சம்பத், எம். பி. சுப்பிரம ல். ஏ., சிற்றுளி-சுப்பிரமணியம் ஆகியோ யிடுகின்றனர்.

ஆத்துரை அடுத்த தம்பம்பட்டியில் நடந்த பிப். 20-ந் தேதி துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்ற இடத்தைத் தோழர் மு. கருணாநிதி பார்வையிட்டபோது எடுத்த படம்: அருகில் தோழர் முல்லைசத்தி, சண்முக வடிவேல். (புகைப்படம். சேலம்-சாமி),

இரு காதலர்கள்...

★ 5-ம் பக்கத் தொடர்ச்சி

ஒரு அடிமை! அடிமைக்கு அரியணையில் ராணியாக அமரும் அந்தஸ்தை அளிக்க விரும்பவில்லை அவன். அவளைத் தன் அந்தப்புரத்தில் சேர்த்து காமசகிழத்தியாக்கி மகிழவே அவன் விரும்பினான். அடிமை ஒருத்தி அந்நிலை பெறுவதையே பெரும் பேருக எண்ணுவாள் என்று கருதினான். ஆகாவின் தந்தை லாலஷீனும் அதற்கு ஒப்பமளிக்க மறுக்க மாட்டான் என்றும் திட்டமாக நம்பினான்.

"தம்பி, இந்தப் பெண்ணைப் பற்றி என்ன நினைக்கிறாய்?" கியாஸ் தம்பியைப் பார்த்துக் கேட்டான்.

"இப்பேர்ப்பட்ட ஒரு பெண்ணோடு குடிசையில் வாழ்ந்தாலும் அதுவே எனக்கு அரண்மனை வாழ்வு! இவள் இல்லாத அரியணையை வெறும் தூசுக்குச் சமானமாக நான் கருதுவேன்" என்றான், ஷம்ஸ்.

"முட்டாள் அடிமைப் பெண்கள் அரியணையை அலங்கரிக்க லாயக் கற்றவர்கள்"

"நாமும் அடிமைப் பெண்ணொருத்தியின் பிள்ளைகள் என்பதை மறந்து விடக் கூடாது, அண்ணா!'

"தவறு ஒருமுறை நிகழ்ந்துவிட்டது என்பதற்காக, அதை நியாயமென்று வாதித்து மீண்டும் நிகழ அனுமதிக்கக் கூடாது, ஷம்ஸ்! நீ இந்த ஆகாவின்மீது காதல் கொண்டிருந்தால் அதை உடனே மறந்து விடு. அவளை என்னுடைய அந்தப்புரத்தில் சேர்க்க முடிவு செய்துவிட்டேன!" - மன்னன் மனதைத் திறந்து காட்டினான் தம்பியிடம்.

அரசனுடைய குரலில் கண்டிப்பு இருந்தது. ஆகாவின் விஷயத்தில் ஷம்ஸ் தலையிடுவதை அவன் விரும்பவில்லை. தன்னுடைய கட்டளைக்கு ஷம்ஸ் கீழ்ப்படியவில்லையானால் என்ன நடக்குமென்பதையும் அவனிடம் எச்சரித்தான். ஷம்ஸ் மௌனமாகவே இருந்தான். ஆனால் களங்கமற்ற ஆகாவின் அழகைக் கறைப்படுத்த முயலும் அண்ணனின் எண்ணத்தை எப்படியும் முறியடித்து விடுவது என்ற முடிவுக்கு வந்தான். சிந்தாமல் சிதராமல் அழகையெல்லாம் ஒருசேரத் திரட்டி நடமாடும் நளினியாய், ஆகாவை உலகில் உலவவிட்ட அல்லா, ஒப்பற்ற ஒரு நிலையில் அவளை வைத்துப் பார்க்க எண்ணியே, பேரெழிலைப் பெண்ணுருவாய்ப் படைத்திருக்க வேண்டும்; அவளைப் படுக்கையறைப் பதுமையாசகி மகிழ நினைக்கும் கியாஸ்–உத்–தீன் அல்லாவின் படைப்பையே அவமானப் படுத்துவதாக நினைத்தான் ஷம்ஸ்! இந்த முடிவோடு ஷம்ஸ், அன்றே லால்ஷீனை அவனுடைய மாளிகையில் சந்தித்தான். அவனுடைய மகள் ஆகாவின் அழகை, அவன் முன்னிலையிலேயே வாயார வர்ணித்துப் புகழ்ந்தான். ஆகா தன் உள்ளத்தைக் களவாடி விட்டதாகவும், அவளை மணந்துகொள்ள அனுமதியும் கோரினான் அடிமையிடம், தக்காண பூமியின் இளவல் ஷம்ஸ்!

அடிமை லால்ஷீனின் முகத்தில் ஒரு வெற்றிப் புன்னகை தோன்றியது. அடிமையென்று அவனை அவதூறாகப் பேசிய அரசன் கியாஸ்–உத்–தீனைப் பழி வாங்கவும், தன் மகள் ஆகாவை அரியணையில் ராணியாக்கிப் பார்த்து மகிழவும், ஷம்ஸ்–உத்–தீனையே பயன்படுத்த அவனுக்கு ஒரு அரிய சந்தர்ப்பம் கிட்டியது!

"இளவரசே, உங்களுடைய இந்தத் தீர்மானத்தை மன்னர் அங்கீகரிப்பாரா? அடிமைகள் எப்பொழுதுமே அடிமைகள்தான் என்பதல்லவா அவருடைய எண்ணம்", என்று லால்ஷீன் மெதுவாக விஷயத்தைக் கிண்டினான்.

"திருமணம் என் சொந்த விஷயம். அதில் தலையிட யாருக்குமே உரிமையில்லை. நீ தலையசைத்து விட்டால் போதும் லால்ஷீன்; என் வாழ்க்கையை ஒரு இன்பகாவியமாக்கி விடுவாள் உன் மகள்"—மன்னனின் தம்பி அடிமையின் மகளை பிச்சை கேட்டான்.

"இளவரசே, அப்படியானால் என் மகளை அணுகி அவள் சம்மதத்தையும் நீங்களே பெற்றுவிடுங்கள். ஆனால் ஒரு நிபந்தனை......என் அடிமைத் தளை நீங்க வேண்டும். இளவரசர்ஷம்ஸ்–உத்–தீன் மாமனார் ஓர் அடிமையென்றால் அந்த அவமானம் எனக்கல்ல!" லால்ஷீன் சாகசமாகப் பேசினான்.

ஷம்ஸ் வாய் விட்டுச் சிரித்தான். "லால்ஷீன் ஏதோ பெரிய நிபந்தனை போடப் போகிறாய் என்று பயந்தேன்...உன்னுடைய மகளுக்கு ஒரு சாம்ராஜ்யத்தையே விலையாகக் கொடுக்கலாமே" என்று கூறினான்.

இந்த உரையாடலுக்குப் பின் இன்பமான பல கனவுகள் கண்ட லால்ஷீன் மகளுடைய அந்தப்புரத்தை அடைந்தான். அவளிடம் இளவரசனின் கோரிக்கையைப் பக்குவமாக எடுத்துக் கூறினான். இளவரசருக்குத் தன்னுடைய இருதயத்தை உடமையாக்குவதில் அவள் தடை சொல்லாதது மட்டுமல்ல, முக மலர்ச்சியால் ஆமோதிப்பும் அளித்தாள். இளமை அழகு எண்ணங்களைப் பிரதிபலிக்கும் இரு கூரிய விழிகள், அவளைக் கண்டவுடன் அவன் முகத்தில் தோன்றிய பரவச உணர்ச்சி—காலையில் மலர் வனத்தில் அவள் கண்ட அவனுடைய எழிற் தோற்றம் அவள் இதயத்தில் தோன்றி இன்ப மூட்டியது!

"ஆகா, நீ அதிர்ஷ்டக்காரி! மன்னர்கள் அடிமைப் பெண்களை அந்தப்புரச் சுந்தரிகளாக்கிக் கொள்வார்களே தவிர, மன மாளிகையில் கொலு வீற்றிருக்கும் மனைவிகளாக்கிக் கொள்வதில்லை. இளவரசனின் இதய சாம்ராஜ்யத்தை வென்ற நீ, எத்தனையோ சாம்ராஜ்யங்களைக் கட்டியாளப் போகிறாய்" என்று ஆருடம் கணித்தான் லால்ஷீன்.

"அப்பா, மன்னர்கள் சாகசக்காரர்களாயிற்றே... அவர்களுடைய மயக்கு மொழிகளை எப்படியப்பா நம்புவது? திருமணத்தைத் தவிர வேறு எந்த நிபந்தனையின் பேரிலும் அவருக்கு உடன்பட மாட்டேன் அப்பா!"

லால்ஷீன் இளவரசன் ஷம்சுத்தீனை மறுநாள் ஆகாவிடம் அழைத்து வருவதாகக் கூறிச் சென்றான். மறுநாள் ஷம்சும், ஆகாவும் சந்தித்த பொழுது இருவருடைய உள்ளங்களும் ஒட்டி உறவாடின!

2

ஆகாவைப் பார்த்ததிலிருந்து அவள் நினைவாகவே இருந்தான் கியாஸ்–உத்-தீன். அந்த சுந்தரி அந்தப் புரத்தை அலங்கரிக்கும் நாளை ஆவலோடு எதிர்பார்த்தான்; லால்ஷீனை வரவழைத்தான்.

"லால்ஷீன் உன்னை சுதந்தர மனிதனாக்கி விட்டேன்; ஆனால் ஒரு நிபந்தனை......"

"ஆகா உங்களை மலர்வனத்தில் சந்தித்ததாக...", லால்ஷீன் அர்த்த புஷ்டியோடு பேசினான்.

"அடிமைக் குலத்தில் தோன்றக் கூடாத அதி ரூபசுந்தரி உன்மகள்."

லால்ஷீன் நறநற வென்று பல்லைக் கடித்துக் கொண்டான்!

மன்னன் தொடர்ந்தான். அவளை என் அந்தப்புரத்தில் சேர்க்க முடிவு செய்து விட்டேன் என்ன சொல்லுகிறாய் லால்ஷீன்?"

"வேந்தே வெந்த புண்ணில் வேல் கொண்டு குத்த வேண்டாம். ஆகா அடிமையின் மகளாகப் பிறக்திருக்கலாம், தக்காணமென்ன, கடலையே எல்லையாக்கி, மாபெரும் சாம்ராஜ்யங்களைக் கட்டி யாளும் மன்னரெல்லாம் அவளை அரியணையில் ராணியாக்கிக் கொள்ளக் காத்துக் கொண்டிருக்கிறார்கள்." என்று லாவ்ஷீன் கோபக் குழம்பைக்கொட்டினான்.

"என் கட்டளையை நிராகரித்துப் பேச அடிமையாகிய உனக்கு என்ன துணிச்சல்? லால்ஷீன், நீ தக்காண சுல்தானை அவமதிககிறாய்." கியாஸ்–உத்தீனின் கண்களில் கோபம் கொழுந்து விட்டு எரிந்தது,

லால்ஷீன் அந்த இடத்தைவிட்டு வேகமாக வெளியேறினான். 'அடிமை என்ற அந்தச் சொல் அவனுடைய இதயத்தை ரம்பம் கொண்டு அறுத்தது. நேரே மாளிகையை நோக்கி நடந்தான். ஆகா யாழில் மலர்க் கரங்களால் மதுர கீதம் எழுப்பிக் கொண்டிருந்தாள். ஆத்திரமடைந்த அவனுடைய மனதிற்கு அது சற்று ஆறுதலாக இருந்தது!

மகளிடம் மன்னனின் கருத்தை விளக்கினான். அவளைத் தன் மனைவியாசகி, இருதயத்தில் இடமளித்துப் பெருமைபடுத்த எண்ணும் ஷம்ஸ்–உத்–தீனின் பெருந்தன்மையையும், பல நூறு பஞ்சணைப் பதுமைகளில் அவளையும் ஒருத்தியாக்கிட நினைக்கும் அரசன் கியாஸ்–உத்–தீனின் கேவல நினைப்பையும், ஆகா ஒரு கணம் ஒப்பிட்டுப் பார்த்தாள். ஷம்ஸ் மீது அவளுக்குள்ள காதல் உறுதியடைந்தது.

"ஆகா, உன் அபிப்பிராயம் என்ன?"—லால்ஷின் மகளைக் கேட்டான்.

"அப்பா, கண்ணியமான முறையில் என்னிடம் காதல்கொண்டுள்ள ஷம்ஸ் எங்கே? காமக் களியாட்டத்திற்கு என்னை பலியிட நினைக்கும் அரசர் எங்கே? அப்பா, ஷம்ஸ் என் மனங்கவர்ந்த மலர்ச் சோலை; மறைந்திருந்து தீண்டப் பார்க்கும் நாகம்தானப்பா, கியாஸ்."

"ஆடும் பாம்பை அடித்துக் கொன்று மகிழும் அவசரக்காரனல்ல அம்மா நான். படமெடுத்துச் சீறும் நாகத்தை மகுடியால் மயக்கும் வித்தை கற்றவன்தான் நான்! பாம்பின் பற்களை ஒவ்வொன்றாகப் பிடுங்குவேன். பிடிபட்ட பாம்பு இரையுண்ணாது. படிப் படியாக இளைத்துச் சாகும்"

சபதம் கூறிவிட்டு வெளியேறினான் லால்ஷின். அவனுடைய மூளை சுறு சுறுப்பாக வேலை செய்தது. அதற்குப்பின் ஆத்திரத்தை வெளிக் காட்டாமல் மன்னனிடம் குழைந்து பேசினான். ஆகாவை சீக்கிரமே சரிப்படுத்தி மன்னனின் அந்தப்புறத்திற்கு அனுப்பி வைப்பதாக ஆசை காட்டினான். பெண் லோலனான கியாஸ்–உத்–தீனும் அடிமை லால்ஷீனின் வார்த்தைகளை அப்படியே நம்பினான். இதற்கிடையில் அழகி ஆகாவும், இளவரசன் ஷம்சும் அடிக்கடி லால்ஷீனின் மாளிகைத் தோட்டத்தில் சந்தித்துத் தங்கள் காதல் பயிரைச் செழித்து வளரச் செய்தனர். ஜோடிப் புறாக்களாகப் பாடி மகிழும் காதலரைக் காணும்போதெல்லாம், தக்காண அரியணையில் ஷம்ஸ் சுல்தானாகவும் ஆகா அவனுடைய பட்ட மகிஷியாகவும் கொலு வீற்றிருப்பதாகவே எண்ணி லால்ஷீன் உள்ளம் பூரிப்பான். தன் திட்டம் உருவாவதற்கான செயல்களில் புது உற்சாகத்தோடு ஈடுபடுவற்கு.

ஆனால், மன்னன் கியாஸ்–உத்–தீனோ எது பற்றியுமே கவலையில்லாமல், ஆகா என்னும் அந்த அழகுத் தேவதை, தன் கரங்களில் துவண்டு கிடக்கப் போகும் இன்ப நாளை எண்ணிக் கொட்டாவி விட்டுக் கொண்டிருந்தான். மகளின் அழகைக்கூறி மையலூட்டி மன்னனை மதியிழக்கச் செய்த லால்ஷீன் மன்னனிடம் அதிருப்தி கொண்ட ஓம்ராக்களை ஒன்று சேர்த்து, அவர்களுக்கு ஆசை காட்டி, தன் சதிக்குத் துணை புரிய ஒரு கோஷ்டியையும் சேர்த்து விட்டான்.

சதிக்கு அரங்கு அமைத்த பின் துணிவோடு செயலில் இறங்கினான் மாளிகையில் பெரும் விருந்தொன்றுக்கு ஏற்பாடு செய்து, அதற்கு மன்னனையும், அவனிடம் விஸ்வாசமாக ஊழியம் பெய்த ஓம்ராக்களையும் அழைத்தான். விருந்து முடிந்தவுடன், மன்னனிடம் மகள் ஆகாவை ஒப்படைத்து விடுவதாகவும் கூறியிருந்தான். நீறுபூத்த நெருப்பாக விளங்கிய அடிமையின் உள்ளத்தில் புகைந்து கொண்டிருக்கும் பழி வாங்கும் உணர்ச்சியை, பேரழகி ஒருத்தியை அனுபவிக்கப் போகும் பேரானந்தத்தில் திளைத்திருந்த கியாஸ் உணரவில்லை. தன்னுடைய சகோதரனுக்கு இழைக்கப்படவிருக்கும் அநீதியை ஷம்சு–உத்–தீனும் தந்தையின் சதித் திட்டத்தை ஆகாவும் அறிய மாட்டார்கள். அவர்களை முன் கூட்டியே உல்லாசப் பயணம் சென்றுவரும்படி லால்ஷின் ஏற்பாடு செய்து விட்டான்!

★ தொடர்ச்சி 9-ம் பக்கம்

"மே மாதத்தில், நாட்டு மக்களை தி. மு. கழகம் கேட்கப்போகிறது—'தேர்தலில் நிற்பதா, வேண்டாமா?' —என்பது குறித்து; தேர்தலில் நிற்க வேண்டுமென மக்கள் கூறுவார்களேயானால், அதை வைத்துக்கொண்டு கூட்டணியினரைக் கேட்பேன் — 'ஏதேதோ செய்ய வேண்டும் என்றீர்களே! இதோ எங்கள் கட்சி தி. மு. கழகம் தேர்தலில் நிற்க வேண்டுமென மக்கள் முடிவு கூறியிருக்கிறார்கள்; நிற்கலாம், வருகிறீர்களா நீங்கள்?' — என்று! அதற்குள்ளாகவே காமராசர் ஏன் அலறுகிறார்? கிலி கொள்கிறார்?

★ 8-ம் பக்கத் தொடர்ச்சி

இரு காதலர்கள்!

விருந்து விமரிசையாக நடந்தது. பொற் கோப்பைகளில் மதுபான வகைகள் பொங்கி வழிந்தன. மன்னன் கியாஸ்-உத்-தீனும், ஓம்ராக்களும் சுய நினைவு இழக்கும் வரை குடித்தனர். ஆனால் லால்ஷீன்—அவன் நினைவிழந்தால் எண்ணிய நிலைபெறுவதெப்படி? எல்லோரும் நினைவிழக்கும் வரையில் காத்திருந்தான். மதியிழந்த மன்னன் லால்ஷீனின் கைப்பாவையானான். அவனை மெதுவாக லால்ஷீன் ஒரு அறைக்கு அழைத்துச் சென்றான். வெளியே பிரபுக்கள் போதையில் மயங்கிக் கிடந்தனர்.

"ஆகா...அவள்...அந்த இன்பச் சிட்டு......எங்கே?" கியாஸ் குழறினான்.

"இதோ அழைத்து வருகிறேன் மகராஜ்! உங்களைக் காணும் ஆசையால் கண்கள் பூத்துப் போய் விட்டாள், அவள்" என்று கூறிவிட்டு லால்ஷீன் உள்ளே சென்றான்.

"அச்சா.....!" என்று கூறிவிட்டு மன்னன் 'சோபா'வில் சாய்ந்தான்.

சற்று நேரத்திற்கெல்லாம் அழகி ஆகா அவன் முன்வந்து நிற்கவில்லை!

கையிலே கட்டாரி ஏந்தி, கண்களிலே வஞ்சம் ஜுவாலை விட, லால்ஷீன் பேய்ச் சிரிப்பு சிரித்த வண்ணம் நின்று கொண்டிருந்தான்.

மது மயக்கத்திலும் மரணபயம் மன்னனை பிடித்துக் கொண்டது!

"லால்ஷீன்...... மகத்தான துரோகம்!"

"துரோகம்! சுல்தான் நீர் வேடிக்கை மனிதர். தந்தை அடிமை! ஆனால் அவனுடைய மகளை மடியிலே அமர்த்திக் கொஞ்ச மனம் இடம் தரும். என்ன மகராஜ் அப்படித்தானே?"

"அது என் இஷ்டம்," என்று தள்ளாடிக்கொண்டே எழுந்தான் கியாஸ். ஏற்கனவே தயாராகயிருந்த காவலாளிகள் மன்னனைக் கீழே தள்ளினர். அவன் மார்பின் மீது கட்டாரியோடு லால்ஷீன் அமர்ந்தான்.

"சுல்தான்! எந்தக் கண்கள் என்னைக் கண்டவுடன் உங்களை அருவருப்புக் கொள்ளச் செய்து அடிமையென்று என்னை வெறுத்ததோ, அந்தக் கண்கள் உங்களுக்கு இனி சொந்தமாக இருக்காது!"

"லால்ஷீன்.........!" மன்னன் கோரமாகக் கத்தினான்.

இளமையின் துடிப்பை வெளிப்படுத்தி நின்ற இரு கருவிழிகள் தோண்டப்பட்டுப் பூமியில் கிடந்தன!

இந்தக் கோரச் செயலுக்குப் பின் லால்ஷீன் புது தைரியம் பெற்றான். வெளியே மயங்கிக் கிடந்த ஓம்ராக்களை, ஒவ்வொருவராக அழைத்து வந்து கட்டாரிக்கு இரையாக்கினான். மன்னனை ஆதரித்தோரை அழைத்த பின், தான் ஏற்கனவே சரிப்படுத்தி வைத்திருந்த ஓம்ராக்களை அழைத்து கண்ணிழந்த மன்னனின் தம்பி ஷம்ஸ்-உத்-தீனை அரியணையில் ஏற்றப் போவதாகப் பிரகடனப் படுத்தினான். ஷம்ஸ் இதை அறியுமுன்பே, மூத்த மகன் கண்ணிழந்த சேதி கேட்டுக் கலங்கி நிற்கும் அவன் அன்னையிடம் சாதுரியமாகப் பேசி ஷம்சை அரியணை ஏற்ற அவளுடைய சம்மதத்தையும் பெற்றான். அண்ணனுக்குப் பட்டம் போனாலும் தம்பிக்காவது அது கிடைத்ததே என்பதில் அவளுக்கு மகிழ்ச்சி.

கண்ணிழந்த கியாஸ்-உத்-தீன் பாதாளச் சிறையொன்றில் மனம் புழுங்கிக் கொண்டிருந்தான். உல்லாசப் பயணம் சென்றிருந்த ஷம்ஸ் திரும்பியவுடன் அண்ணனின் நிலை கண்டு இரங்கினான். லால்ஷீன் சர்வ சக்தி வாய்ந்தவனாக விளங்கினான். அவனோடு கருத்து மாறுபாடு கொண்டால் அழகி ஆகா மட்டு மல்ல, நடேகை நழுவி விடும் என்று பயந்தான் அவன்! லால்ஷீனால் ஆட்டிப் படைக்கப்படும் பொம்மையானான்.

தந்தையின் சதியை அறிந்த ஆகா துடித்தாள்; ஆத்திரப் பட்டாள். வெறி பிடித்த தந்தையின் போக்கை மனதார வெறுத்தாள். அண்ணனின் இரத்தக் கறை படிந்த அரியணையில் அமர்ந்து, ஆட்சி செய்ய ஒப்புக் கொண்ட தன்னுடைய காதலன் ஷம்சையும் வெறுக்கலானாள் பட்டம் பதவிக்கு ஆசை கொண்டு மனிதப் பண்பை மறந்து மிருகமாக மாறிடும் மனித ஜன்மங்களிடமிருந்து ஒதுங்கி வாழ முடிவு செய்தாள்.

ஆனால் அரியணை ஏறிய ஷம்ஸ், ஆகாவைப் பட்டத்தரசியாக்கிக் கொள்ளத் துடித்தான். அவளோ அவனுக்குப் பேட்டியளிக்கவும் மறுத்தாள்! சதிக்கும் தனக்கும் தொடர்பேதுமில்லை என்பதை நிரூபிக்கச் சான்றுகள் பல காட்டினான். சதிக்கு அவன் உடந்தையல்ல என்றாலும், ஒழுங்கற்ற முறையில் அரசனான ஒருவனை மணக்க முடியாமைக்கு வருத்தம் தெரிவித்தாள். ஆகாவுக்காக, அரியணையையே விட்டுவிடவும் சித்தமானான் ஷம்ஸ்! ஆனால் அவளோ அதற்கும் கேளாக் காதினளாகவே இருந்தாள்.

அண்ணன் குருடனானான்! குருடன் ஆட்சி செய்வது அவர்கள் குல சம்பிரதாயத்துக்கு விரோதம். ஆட்சியைக் கைவிட்டாலோ, லால்ஷீனின் கோபத்திற்கு ஆளாக வேண்டிவரும். அவனுடைய கோபமோ பொல்லாதது! ஆனால் ஆகா இல்லாத வாழ்க்கை......ஷம்ஸ் விரும்பியது கிடைக்கவில்லை, அவனுக்குக் கிடைத்ததையோ அவள் விரும்பவில்லை. அவன் நிலை அவனுக்கு தர்ம சங்கடமாக இருந்தது.

தன்னுடைய கனவுகள் நிறைவேறுவதற்கு மகளுடைய பிடிவாதமே தடையாயிருப்பதை எண்ணியபோது, லால்ஷீன் ஆத்திரங் கொண்டான். நயமாக அவளிடம் பேசினான்; தக்காணத்தின் பட்டமகிஷியாவதின் பெருமைகளை அவளிடம் எடுத்துரைத்தான். அவள் தன்னுடைய முடிவில் பிடிவாதமாகவே இருந்தாள். சீறினான் லால்ஷீன்; அவள் சிந்தை கலங்கவில்லை. ஆனால் அவளுடைய உள்ளத்தில் தந்தையைப் பற்றிய பயமொன்று குடிகொண்டிருந்தது. தன்னுடைய அற்ப ஆசைக்காக மன்னரின் விழிகளைப் பிடுங்கி, அவரைச் சார்ந்தோரைப் படுகொலை செய்த தந்தை தனக்கு எந்தவிதமான தீமையும் செய்யத் தயங்கமாட்டார் என எண்ணிப் பயந்தாள்!

3

பிரோஸ் கான், அகமத்கான் என்ற இரு பிரபுக்கள்—கியாஸ்-உத்-தீனின் நெருங்கிய உறவினர்கள்—ஷம்ஸ், லால்ஷீனின் கைப்பொம்மையாக இருப்பதை எதிர்த்துக் கலகம் செய்தனர். தந்தையின் கொடுமைகளுக்குப் பயந்த ஆகா, அவர்களிடம் சென்று அடைக்கலம் புகுந்து, தன்னுடைய சோகக் கதையை அவர்களுக்கு எடுத்துக் கூறினாள். அவர்களும் ஆகாவின் நிலைக்கு அனுதாபப் பட்டனர். தன்னுடைய இன்பப் பேடு எதிரிகளிடம் சென்று அடைக்கலம் புகுந்து விட்டதையறிந்த ஷம்ஸ் மனமுடைந்து போனான். கலகக்காரர்களை இரு முறை சண்டைகளில் தோற்கடித்தும் அவனுக்குத் திருப்தி ஏற்படவில்லை. தன்னுடைய கனவு இப்படி எதிர்பாராத வகையில் சிதைந்துவிடும் என்பதை உணராத லால்சீனும் விரக்தி மனப்பான்மை கொண்டான்.

இதற்கிடையில் பிரோஸ்கானும் அகமத்கானும் ஷம்ஸ்-உத்-தீனுடன் ஒப்பந்தம் செய்து கொள்வதாகச் செய்தியனுப்பினர். ஒப்பந்தத்தின் விளைவாகவாவது, தன் இதயராணி மீண்டும் தனக்குக் கிடைக்கமாட்டாளா என்ற எண்ணத்தில் ஷம்ஸ் ஒப்பந்தம் செய்து கொள்ள ஒப்புக் கொண்டான். ஆகா மீண்டும் கிடைத்துவிட்டால், சிதைந்துபோன லட்சியங்களைச் செம்மைப்படுத்த ஒரு வாய்ப்பு ஏற்படும் என எண்ணி லால்ஷீனும் ஒப்பந்தத்தை எதிர்க்கவில்லை.

பிரோஸ்கானையும், அகமத்கானையும், குல்பர்கா நகரிலுள்ள தன்னுடைய மாளிகையில் வரவேற்பதென ஷம்ஸ் முடிவு செய்தான். பிரோஸ் மண்டபத்தினுள் நுழைந்து மன்னனை வணங்கினான்.

"வேந்தே ஒரு விண்ணப்பம்! அகமத்துடன் தங்களை தரிசிக்க எங்களுடைய உறவினர் பலர் உடன் வந்திருக்கிறார்கள். அவர்களை உள்ளே விட அனுமதியளிக்க வேண்டும்", என்று பிரோஸ் மன்னனை வேண்டினான். அரசனும் அமைச்சர் மூலம், வருகின்ற குதிரை வீரர்களுக்கு வழிவிடும்படி செய்தி யனுப்பினான். செய்தி போய்ச் சேர்ந்ததுதான் தாமதம். அகமதின் தலைமையில் ஆயுதம் தரித்த நூற்றுக் கணக்கான குதிரை வீரர்கள் 'குபுகுபு' வென்று உள்ளே நுழைந்தனர். முன்பே திட்டமிட்டபடி பிரோஸ்கான் லால்சீனைக் கைது செய்தான். எதிர்பாராத இந்த தாக்குதலைக் கண்ட ஷம்ஸ் வாளை உருவிப் போர் செய்ய முனைந்தான். அவனுடைய முயற்சி செயல்படுமுன் அவன் கத்தி பிடுங்கப் பட்டுக் கைதியானான். அதற்குள் நகருக்கு வெளியே காத்துக் கொண்டிருந்த பிரோஸ் அகமது படைகள் நகரைத் தாக்கிக் கைப் பற்றின.

பிரோஸ் தக்காணத்தின் சுல்தான் ஆனான். காதலுக்காக ஏங்கிய ஷம்ஸ் காலமெல்லாம் கண்ணீர் வடிக்கும் நிலையில் சிறையில் தள்ளப்பட்டான்.

தக்காணத்தில் நடந்த பயங்கரமான அரசியல் சதிகளுக்குக் காரணமாயிருந்தவனும், கியாஸ்-உத்-தீனின் கண்களைப் பிடுங்கியவனுமான லால்ஷீன் — அந்த அடிமை லாசீன்—இப்பொழுது தக்காணத்தின் சுல்தானான பிரோஸ்கான் முன் நின்று கொண்டிருந்தான்!

"துரோகி, நீ செய்த கொடுமைகளை எண்ணிப் பார்த்து அதற்குரிய தண்டனையை நீயே கேள்!"

"தீமை செய்தவர்களுக்கும் நன்மையே திருப்பிச் செய்ய வேண்டும் என்பதுதான் அல்லாவின் ஆணை!" மரணத்தின் வாயில் நிற்கும் போதும் மனங் குலையாமல் பதிலளித்தான் லால்சீன்.

"தகாத இடத்தில் இரக்கங் காட்டுவது மகா குற்றம் லால்சீன். உன்னுடைய கரங்களால் பயங்கரமான கொடுமைகளுக்கு ஆளாக்கப் பட்டவர் யாரோ, அவரே உனக்குரிய தண்டனையையும் முடிவு செய்வார்!" பிரோஸ் தன்னுடைய தீர்ப்பை வழங்கினான்.

கண்ணிழந்த மாஜி மன்னன் கியாஸ்-உத்-தீன், சுல்தான் முன் கொண்டு வரப்பட்டான்.

"கியாஸ், கண்ணிழந்த ஒருவனை அரசனாக்க எம் குல வழக்கம் அனுமதிக்காது இல்லாவிட்டால் தக்காணத்தின் செங்கோல் என் கையில் இருப்பதைவிட உன்

★ தொடர்ச்சி 10-ம் பக்கம்

திருமண விழா.

அன்புடையீர்,

26—3—56 திங்கட்கிழமை காலை 9-மணியளவில், அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில், ஈரோடு பெரியார் நகர மண்டபத்தில், நான், கரந்தை திருவாளர் எல். சாமிநாதன் அவர்கள் குமாரத்தி திருநிறைச் செல்வி தனபாக்கியத்தை வாழ்க்கை துணைவியாக ஏற்றுக்கொள்ளும் திருமண விழா நடைபெறும். தாங்கள் விழாவிற்கு வந்திருந்து வாழ்த்தியருள வேண்டுகிறேன்.

தோழர் ஈ. வெ. கி. சம்பத் வாழ்த்துரை வழங்குவார்.

தங்களன்புள்ள,
எஸ். அப்பாவு, ஈரோடு.

பொம்மைக் கொலு!

சென்னை-மத்திய பரதேசம் ஆகியவற்றின் கவர்னர்கள், மாநிலத்து முதலமைச்சர்கள் தங்களை எதிலும் கலந்தாலோசிப்பதில்லை— என்று குறைபட்டுக் கொண்டார்களாம்.

எப்படி கலந்தாலோசிப்பது? கவர்னர்கள் கண்ணாடிப் பெட்டிக்குள் இருக்கும் பொம்மைகள் தானே?—என்று கேட்கிறது. 'சங்கர்ஸ் வீக்லி'!

சோகக் கதை......

★ 4-ம் பக்கத் தொடர்ச்சி

திருவாங்கூர்ப் பகுதியிலே கிடைக்கிறது-தாதுப்பொருள்!

அதற்கான ஆராய்ச்சி நிலையம் பம்பாயில்! வட நாட்டில்!

தென்னகத்தில் அந்த ஆராய்ச்சி நிலையம் துவக்குவதற்கும், அமைச்சரின் கூற்றுப்படி 'இயற்கைதான்' தடை செய்கிறதோ என்னவோ நாமறியோம்!

ஆனால் இங்கிருக்கும் 'தேசியத் தோழர்களோ' தொண்டை கிழிய, நாவரண்டுவிட, நிலையை உணராமல் 'பாரத் மாதாகி ஜே' என்று ஓயாமல் இன்னும் கூப்பாடு போட்டுக் கொண்டிருக்கின்றனர்.

இந்நிலையில் டில்லி ஏகாதிபத்தியத்தால் தென்னகம் புறக்கணிக்கப்படும் சோகக் கதை—தொடர்வதில் வியப்பென்ன இருக்கிறது?

★

இரு காதலர்கள்..

★ 9-ம் பக்கத் தொடர்ச்சி

கையில் இருப்பதைத்தான் நான் பெரிதும் விரும்புவேன்."

"சுல்தான், எனக்கு அந்த ஆசையே இப்பொழுது இல்லை.,"

"கியாஸ், வாழ்க்கையில் உனக்கு வேறு எந்த ஆசை இருந்தாலும் கூறு உடனே நிறைவேற்றி வைக்கிறேன்..."

"சுல்தான், எனக்கு வாழ்க்கையில் ஒரே ஆசை தான். வாழ்க்கையை ஒளி மயமாக்கி மகிழ்வித்த என் விழிகளை இருட்டாக்கிய அந்த மாபாவியை என் கரங்களாலேயே நான் வஞ்சம் தீர்க்க வேண்டும்.

பிரோஸ் ஜாடை காட்டினான். அடிமை லால்ஷின் தன்னால் விழி பிடுங்கப்பட்ட கியாஸ்-உத்-தீன் முன் கொண்டு வந்து நிறுத்தப் பட்டான்.

"என் முன்னே நிற்பவன் யார்? கியாஸ் ஆவேசமாகக் கேட்டான். லால்ஷின் பதில் பேசவில்லை!

"அயோக்யனே, உன் முடிவை இதோ ஏற்றுக் கொள்," என்று கூறி கத்தியைப் பலமாக ஓங்கி கியாஸ் அவன் மீது வீசினான்.

லால்ஷின் வேரற்ற மரம்போல் தரையில் பிணமாகச் சாய்ந்தான்.

★

லால்ஷினின் பிணத்தின் மீது ஆகா விழுந்து புரண்டு அழுதாள்.

"மகராஜ், தந்தையை இழந்து தவிக்கும் எனக்கு ஒரு ஆறுதல் அளிக்க மாட்டீர்களா?"

"கேள் ஆகா; சுல்தான் அவருடைய அதிகாரத்துக்கு உட்பட்ட எதையும் உனக்கு அளிக்க மறுக்க மாட்டார்"

"மகராஜ், சிறையில் வாடும் ஷம்ஸ் என் காதலர் — குற்றமற்றவர். என் தந்தை லால்ஷினுக்குப் பயந்தே அரியணையில் அமர ஒப்புக் கொண்டார். எனக்காக அரியணையையும் துறக்கத் தயாராக இருந்தார்...ஆகவே, அவரை மன்னித்து, விடுதலையளித்து, எனக்கு வாழ்வளிக்கவேண்டும்!"

"ஆகா, கவலைப்படாதே. இனி ஷம்ஸ் சுதந்திரமனிதன் மட்டுமல்ல. தௌலதாபாத் மாகாணத்தை அவனுக்கு உரிமையாக்கி விட்டேன் இந்த நற் செய்தியை நீயே அவனிடம் சென்று தெரிவித்து விடு."

அரசன் பேசி முடிப்பதற்குள் புள்ளி மான் போல் ஆகா துள்ளியோடி மறைந்தாள்.

"ஷம்ஸ்...!" யாழினும் இன்மையாக இசைத்தது அந்தக் குரல்.

அவன் உணர்ச்சி யில்லாமல் திரும்பிப் பார்த்தான். "நான் மரணமடையும் முன் என்னிடம் சமரசம் பேசிவிட்டுப் போக இப்பொழுது வந்தாயா, ஆகா. அண்ணனை வஞ்சித்து அரியணையைப் பறித்த அயோக்கியன் என்று தானே இன்னும் நினைக்கிறாய்?" அவன் கண்களிலிருந்து பொலபொல வென்று கண்ணீர் உதிர்ந்தது.

"ஷம்ஸ், நம்முடைய காதல் வென்றுவிட்டது. நீங்கள் விடுதலை மட்டும் பெறவில்லை. எழில் குலுங்கும் தௌலதாபாத்துக்கு சொந்தக்காரர்"

"உண்மையாகவா, ஆகா!

"ஆம்மாம், நீங்கள் இனி எனக்கு ராஜா; நான் உங்களுக்கு.. ..."

"இன்ப ராணி! இதய ராணி!"

★

வாழ்த்துகிறோம்

தென்னிந்திய நடிகர் சங்கத்தின் செயற்குழு உறுப்பினரும், எம். ஜி. ஆர். நாடக மன்றத்தின் மேலாளருமான திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள், தோழியர் இராஜம்மாள் அவர்களை 12-3-56 அன்று திருப்பரங் குன்றத்தில் வாழ்க்கைத் துணைவியராக ஏற்றுக் கொண்டார். மணமக்களுக்கு நம் மகிழ்ச்சி நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

விலாசம்......

★ 2-ம் பக்கத் தொடர்ச்சி

பிண மேடுகளை எழுப்பிவிட்டு, பேயாட்சி நடத்தி, பெருக்கெடுத்த ரத்த ஆற்றிலே உடல் நனைத்து, துப்பாக்கி முனைகளை மக்கள் பக்கம் திருப்பிவிட்டு, 'ஜனநாயக'ப் போர்வையில் 'ஜார்' வேடம் தாங்கி நடித்த வரல்லவா இவர்!

இவர் விஷ நாக்கிலிருந்து இதைவிட வேறென்ன 'விவேகமான' வாசகங்கள் உதிரப் போகின்றன!

பாடும் விழிகளிலும், பவள இதழ்களிலும் 'ரசம்' அனுபவித்துக கொண்டிருந்த ஜார் மன்னன் நிக்கோலஸ், தன இறுதி நாட்களில் மணிமகுடம் பறிக்கப் படும்தறுவாயில்-மக்கள் மன்றம் புயலென-புகைக்கும் எரிமலை என எழுச்சி பெற்றுவிட்ட வேளையில், ஆடசிச் சக்கரம் சுக்கு நூறாக உடைத்தெரியப் பட்ட போது பீடரோகிராடுக்குத் திரும்பிவர முயன்றான். நடுவழியில அவன் வந்துகொண்டிருந்த ரயில் நிறுத்தப்படடுவிட்டதாம்! அகில ரஷ்யாவின் அதிபதி—'பரிசுத்த ரஷ்யா'வின் 'பிதா'! என்று குருமார்களால் போற்றப்பட்ட ஜார் மன்னன சென்ற ரயில், நகரவில்லையாம்! அந்தநேரத்தில் ஜரினா, தன் கணவன ஜார் மன்னனுக்கு ஒரு அவசரத் தந்தி அனுப்பினாளாம்; அந்த தந்தி அவளுககே திரும்பி வந்துவிட்டதாம்! அத்துடன் வந்த ஒரு குறிப்பில் 'விலாசதாரர் இருப்பிடம் தெரியவில்லை என்று குறிப்பிடப்பட்டிருந்ததாம்! ரஷ்ய மண்டலத்திலே ஆதிக்கக் கொடி பறக்க, அதிகாரப் பட்டாளம் புடைசூழ, ஆலவட்டம் வீசுவோர் பராக்குக கூற—எதேச்சாதிகாரம் நடத்திய ஜார் மன்னன் நிக்கோலஸ்—'விலாசமற்றவனாக்க'ப் பட்டிருக்கிறான் அங்கே!

அவன் ஆணவமும், அதிகாரத் திமிரும் 'அவன் ஆட்டு மந்தைகள்' என்று எந்த மக்கள் சக்தியைப்பார்த்துக் கொக்கரித்தானோ -அதே மக்கள் சக்தியால் குப்பை மேட்டிலே வீசப்பட்டிருக்கிறது.

'வெறிநாய்' என்று சரித்திரக்காரர்களால் குறிப்பிடப்பட்ட ரஸ்புடீன்; ரசவல்லிகளின் தேன் இதழ்களில் மொய்த்துக் கிடந்த நிலை மாறி, பலாத்காரமாக சுட்டுக் கொல்லப்பட்டான்; திமிர் பிடித்த அவன் தலை;போகப் புருக்களால் சூடேறிக் கிடந்த அவன் ரத்தத்திலேயே புதையுண்டது!

இந்த பயங்கர முடிவை அடைவதற்கு முன்னாலே, அந்த பொல்லாதவனும் 'மக்கள் கூட்டம்—ஆட்டு மந்தைகள்' என்றுதான் எக்கொலிக் கொட்டி பெருநகை சிந்தினானும்!

இந்த சோகச் சித்திரம், ஆச்சாரியார் அறியாததல்ல!

என்றாலும் குதிரை திருடி குருபீடத்தைப் பிடித்துக்கொண்ட ரஸ்புடீனுக்கு இருந்த 'தலைகனம்' அரசியல சருகாகிவிட்ட ஆச்சாரியாரையும் பிடித்துக்கொண்டிருக்கிறது. அதன் விளைவுதான்—'மக்கள் ஆட்டு மந்தைகள், அவர்களின் அபிப்பிராயத்தைக் கேட்க வேண்டிய அவசியம் என்ன?' என்ற செருக்கு மொழி!

சரித்திரம் சும்மாவா இருக்கிறது?ரஸ்புடீனை நம் கண்முன்னால் கொண்டுவந்து நிறுத்துகிறதே! நிக்கோலசை நினைவுபடுத்துகிறதே! எவ்வளவு விரைவில் அந்த ஏதேச்சாதிகாரி 'விலாசமிழந்து போனான் என்ற எச்சரிக்கை சங்கநாதத்தை முழங்கிக்கொண்டிருக்கிறதே, என் செய்ய?

சரித்திரம் காலம் காட்டும் நிலக் கண்ணாடி!

அரசியல் பாட்டையில் நடை பழகுவோர் — அந்தக் கண்ணாடிக்கு முன்னால் நின்று தங்களை சரிபார்த்துக் கொள்வது விவேகமான செயலல்லவா?

—வில்வம்

கதையும் காட்சியும்!

ஆற்றிலே வெள்ளம்-நீர் வேகமாக ஓடிக் கொண்டிருந்தது. பாவம், அதிலே ஒரு சிற்றெறும்பு சிக்கிக் கொண்டது. தத்தளித்தது; தடுமாறியது. அதைப் பார்த்து விட்டது ஆற்றங்கரையோர ஆலமரத்தில் உட்கார்ந்திருந்த புரு ஒன்று. சிற்றெறும்பும் அந்தப் புருவைப் பார்த்து விட்டது. அதன் முகத்திலே பரிதாபம்; புருவின் முகத்திலே அனுதாபம். உயிருக்கு மன்ருடியது சிற்றெறும்பு; உதவி செய்யத் துணிந்தது புரு! எப்படித்தெரியுமா...?

★

"என்ன படித்துக் கொண்டிருக்கிருய் கற்பகம்?...உம்..."

—வெற்றிலைச் சுருளை வாயினுள் திணித்தபடி, இப்படிக் கேட்டுக் கொண்டே வந்தார் அண்ணன். சாப்பிட்டு முடிந்ததும் தவருது வெற்றிலை பாக்கு போடுவது அவாது வழக்கம். அதிலே ஜீரணிக்கும் சக்தி இருக்கிறதென்றுகூட அவர் காரணம் சொல்லுவார்.

"ஒன்றுமில்லை அண்ணு, பாடப் புத்தகத்திலே 'உதவி செய்தால் உண்டு பலன்'—என்று ஒரு கதை யிருக்கிறது. அதைப் படித்துக் கொண்டிருக்கிறேன்!" என்றது தங்கை கற்பகம்.

அண்ணன், "கதையா? நான் கூட உனக்கு ஒரு கதை சொல்ல வேண்டும் என்றல்லவா வந்தேன்..." என்ருர்.

தங்கைக்குக் கேட்க வேண்டுமா? கொள்ளை மகிழ்ச்சி!

"சொல்லண்ணு! சீக்கிரம் சொல்லண்ணு!" என்று தொந்திரவு செய்ய ஆரம்பித்துவிட்டது. 'கதை' என்று சொல்லி விட்டு தங்கையிடமிருந்து தப்பிவிட முடியுமா. என்ன? அண்ணன் சொன்ஞர்:

"மாலை நேரம்—

"ஆலையின் சங்கு ஊதியது. 'ஏ, தொழிலாளத் தோழர்களே! நாளெல்லாம் செய்த வேலை போதும்; பட்ட துன்பம் போதும்; புறப்படுவீர்! புறப்படுவீர்!' என்று விடுதலைப் பத்திரம் வாசித்தது. அந்த தொழிற்சாலையிலிருந்து, குபுகுபு என்று வெளியே பாய்ந்து வந்தார்கள் தொழிலாளர்கள்.

"அந்த ஏழைகளில் ஒருவன் ஏழுமலை. இயந்திரத்தொழிலாளி! அழுக்கடைந்த கால் சட்டையுடன் தன் வீடு நோக்கி நடந்து கொண்டிருந்தான். அப்போது சாலையோரத்திலிருந்து ஏதோ முனகல் சப்தம் எழுந்தது. ஏழுமலை திடுக்கிட்டு விட்டான். எனனவென்று தேடிஞன். மரத்தடி ஒன்றிலே மயஙகிய நிலையில் மல்லாந்து கிடந்தான் ஒரு தம்பி. ஏழுமலை இயந்திரங்களுடன் பழகுபவன்; இருந்தாலும் உள்ளத்திலே இரக்க சிந்தை இல்லாமலில்லை. அந்தப் பரிதாபத்திற்குரிய சிறுவனிடம் ஓடிஞன். பார்த்தான்; பதைத்துப் போஞன். பாவம், அந்தப் பையன் பயங்கரமான நிலையில் தோன்றிஞன். பசி, பட்டினி—இவை தந்த பரிசு போலும், அவன் மரணத் தருவாயிலே கிடந்தான்.

"ஏழுமலைக்கு பரிதாபமாக இருந்தது. என்ன செய்வது? ஏழையைக் கண்டு ஏழைதானே இரங்க வேண்டும்? அப்படித்தானே..."—என்று சொல்லிக் கொண்டே அண்ணன்இன்னொரு வெற்றிலையை எடுத்து, சுண்ணும்பு தடவ ஆரம்பித்துவிட்டார்.

அதற்குள் தங்கை தன் கையிலிருந்த புத்தகத்தைப் புரட்டியது; படித்தது.

★

ஆற்று வெள்ளத்திலே சிற்றெறும்பு; ஆல மரத்திலே புரு. காப்பாற்ற என்ன வழி? உடனே புரு ஒரு முடிவுக்கு வந்தது. தன் அலகிஞல் ஒரு ஆல இலையைப் பறித்தது. அதை ஆற்றிலே சிற்றெறும்புக்குப் பக்கத்தில் விழும்படியாக வீசியது. நல்ல வேளை, இலை சரியான இடத்தில் விழுந்தது. உடனே சிற்றெறும்பு அந்த இலையின்மேல் தாவிக் கொண்டது. அப்போது தான் அதற்கு உயிர் வந்தது. புருவை நன்றியுடன் பார்த்தது. இலை மிதந்து கரைக்கு வந்தது. சிற்றெறும்பு சாவிலிருந்து தப்பித்து விட்டது...

★

அதற்குள் அண்ணன் மீண்டும் கதையை ஆரம்பித்து விட்டார்.

"என்ன...ஏழுமலை அந்தப் பையனை எப்படியும் காப்பாற்ற எண்ணிஞன். பக்கத்திலிருந்த ஓடையிலிருந்து தண்ணீர் எடுத்து வந்தான். முகத்தில் தெளித்தான். பிறகு, வேக வேகமாகக் கடைக்கு ஓடிஞன். ஏதோ பலகாரம் வாங்கி வந்தான்; கொடுத்தான். பசியிலிருந்து, பயங்கர சாவிலிருந்து பையன் தப்பித்து விட்டான். ஏழுமலைக்கு ஒரே மகிழ்ச்சி! தம்பி தான் யாரென்று சொன்ஞன்... அதிகம் வளர்த்துவானேன்? அவன் பெயர் வேணு—ஒரு அஞதை' ஏழுமலை அவன் கதையைக் கேட்டு அழுதே விட்டான். அவனை தன்னுடன் அழைத்துச் சென்ருன். பக்கத்து ஊரிலே தன்னுடைய நண்பன் ஒருவனின் கடையில் ஒரு வேலையும் வாங்கித் தந்தான்......"

அண்ணன் திடீரென்று எழுந்து வெளியே போஞர். வெற்றிலைப் பாக்கு எச்சில் துப்பப் போகிருர் என்பதை உணர்ந்த தங்கை புத்தகத்தைப் பிரித்தது.

★

பல நாட்கள் சென்று விட்டன. சிற்றெறும்பு சுகமாக இருந்தது. ஒரு நாள் இரைதேட வெளியில் புறப் பட்டது. அப்போது ஒரு பயங்கரக் காட்சியைக் கண்டு விட்டது. வேடன் ஒருவன் புரு ஒன்றைக் கொல்ல குறி வைத்துக் கொண்டிருந்தான். சிற்றெறும்பு அந்தப் புருவைப் பார்த்தது. மறுகணம் 'ஐயோ' என்று அலறி விட்டது. ஏன் தெரியுமா? அன்ருெரு நாள் அதைக் காப்பாற்றிய புரு தான் அது! தனக்கு உயிர் கொடுத்த புரு. சாவுக்கு முன்னே அல்லவா நிற்கிறது? சிற்றெறும்பு என்னவோ முடிவு செய்து விட்டது. மெதுவாக வேடனின் காலுக்கருகில் சென்றது. வேடன் வில்லில் அம்பு வைத்து நாண் ஏற்றிஞன். அதே சமயம் 'நறுக்' கென்று அவன் காலில் கடித்தது சிற்றெறும்பு. 'ஐயோ' என்று அலறிஞன் வேடன. புரு தப்பி விடடது.

★

"வேணு வேலைக்குப் போய் நாலைந்து வருடங்கள் ஆகிவிட்டன..."—எச்சிலைத் துப்பிவிட்டு வந்த அண்ணன் கதையை ஆரம்பித்து விட்டார்:

"ஒரு நாள் வேணு; பக்கத்து ஊரிலே நடந்த கோயில் திருவிழாவுக்குச் சென்ருன் 'ஆண்டவனை'ப் பார்க்கச் சென்ற அவனுக்கு 'ஏனடா வந்தோம்?' என்ருகி விட்டது. அத்தனைப் பிச்சைக்காரர்கள்! காலிழந்தும், கையொடிந்தும், கண்கள் பறி போயும், காதுகள் அடைத்தும், அப்பப்பா! எண்ண முடியாத ஏழைப் பரதேசிகள்! ஆண்டவன் கோயில் முன்னேயா இந்த பயங்கரக் காட்சி! வேணுவுக்குத் தலையே சுழன்றது. தள்ளாடி நடந்தான். ஆனல், திடுக்கிட்டு நின்ருன். அவன் கண்கள் அகல விரிந்தன. மறுகணம் அவைகளிலே படபடப்பு—துடிதுடிப்பு! எதைக் கண்டு இந்தத் தவிப்பு?

"அங்கே...அந்தப் பரதேசிக் கோலத்திலிருந்தோருக்கு மத்தியிலே அன்ருெரு நாள் அவனுக்கு உயிர் கொடுத்தானே, அந்த ஏழை ஏழுமலையும் இருந்தான்; இறந்து கொண்டிருந்தான, கைகள் இரண்டும் இல்லாத—கண்கள் இரண்டும் அடைத்துப் போன—கோரத் தோற்றத்தில்!

"வேணு ஓடிஞன்; அழுதான்; அக்கதி ஏன் வந்தது என்று கேட்டான். இரவு பகலென்று பாராது பணி புரிந்த ஏழுமலை, ஒரு நாள் இரவில் தூக்கக் கலக்கத்தில் தடுமாறி, மலைபோன்ற இயந்திரம் ஒன்றிலே சிக்கி விட்டான். அதன் விளைவுதான் அந்தக் கோலம்! அதைக் கேட்ட வேணு துடித்தே போஞன். வரண்டு கிடந்த தொண்டையால் 'பசி, பசி' என்ருன் ஏழுமலை வேணுவிடம் அப்போது காலணுகூட இல்லை. என்ன செய்வான்? கண்ணிழந்த ஏழுமலையின் முன்னே விரித்திருந்த கந்தைத் துணியில், யாரோ இரக்க முள்ளோர் வீசி எறிந்து போயிருந்த சில காலணுக்கள் கிடந்தன. அவைகளைப் பொறுக்கிஞன். கடையிருந்த திசைநோக்கி ஓடிஞன்... ஆஞல் கண நேரத்தில் அவன் முதுகில் 'படார்' என்று ஒரு அறை விழுந்தது. "திருட்டுப் பயலே! பணக்காரனிடம்தான் திருடுறீங்கன்ஞ, அந்தக் கண்ணில்லாத கபோதியிடமுமா திருடுறே?" என்ற கூச்சலுடன் அவனைக் கட்டிப் பிடித்தான் ஒரு முரட்டு போலீஸ்காரன். வாதாட நேரமேது? வேணு திமிறிஞன். மறுகணம், மற்ருெரு போலீஸ்காரனின் முரட்டுத் தடி அவன் தலையில் 'படார்' என்று விழுந்தது.

"ஐயோ—என்று அலறிஞன் வேணு கீழே சாய்ந்தான். மயக்கமுற்ருன்..."

அண்ணு தம்ளரில் தண்ணீரை எடுத்துக் கொண்டு வாய் கொப்பளிக்க வெளியே சென்ருர்.

★

தங்கை புத்தகத்தை விரித்தது. 'உதவி செய்தால் உண்டு பலன்'—இப்படிக் காணப் பட்டது அந்தக் கதையின் தலைப்பு!

ஆஞல் அண்ணன் சொல்லிய கதையிலோ...ஏன இந்த வேற்றுமை?—தங்கை யோசித்தது.

அதற்குப் பதில் கிடைத்ததோ என்னவோ, உங்களுக்குக் கிடைத்திருக்குமே; புத்தகத்தில் படித்தது ஏட்டுக் கதை—ஆஞல் அண்ணன் சொன்னதோ இன்றைய நாட்டு நடப்பு!

—சொர்ணம்



பி. நூர் முகமது;
திருவிதாங்கோடு.

(?) காங்கிரசுக்கும், கடவுளுக்கும் உள்ள வித்யாசம் என்ன?

காங்கிரஸ் தோன்றி மறையப் போவது; கடவுள் தோன்றுவதே இல்லை-அவ்வளவுதான்!

வெற்றிவேந்தன்; கோவை.

(?) நேரு ஒரு நாடோடியா?

இல்லை; அவர் ஒரு 'நாடோடி'யின் சகோதரர்!

வி. பாலன், சவுக்கார்பேட்டை.

(?) தென்னாட்டைப் பொறுத்த வரை ஐந்தாண்டுத் திட்டங்களினால் என்ன லாபம்?

அரசாங்க அச்சுக் கூடத்துக்கு வேலை கிடைத்திருப்பதைத் தவிர ஆன பலன் வேறெதுவும் இல்லை!

பாஸ்கரன்; கோவை.

(?) எனக்கு ஒரு டன்னைத் தூக்கக் கூடிய சக்தி இருக்கிறது...

பெருமைப் படாதீர்! ஒருபவுண்டு மூளை உம்மைச் சாய்த்துவிட முடியும்!

ப. தியாகராசன், வேலூர்.

(?) டல்லஸ் யார்?

அமெரிக்க நாட்டு ஆச்சாரியார்—வெறித் தன்மையில்தான்!

குமரேசன்;
தண்டையார்பேட்டை.

(?) பாகிஸ்தான் எல்லையில் ஏன் போர் முழக்கம் கேட்கிறது?

பாக் அரசாங்கம் பொதுமக்கள் எழுப்பும் கண்டனக் குரலை பீரங்கிச் சப்தத்தால் அமுக்கப் பார்க்கிறது—என்றுதான் அதற்குப் பொருள்!

எஸ். ருமூர்த்தி,
சிந்தாதிரிப்பேட்டை.

(?) காமராசருக்கு நீந்தத் தெரியுமா?

புயல் பிரதேசத்தில் இடுப்பளவு தண்ணீரில் நீந்தக் கற்றுக் கொண்டார். என்ன செய்வது: இப்போது சுழலில் அல்லவா மாட்டிக் கொண்டிருக்கிறார்!

அபயன், சோழவந்தான்.

(?) நேரு அமெரிக்காவுக்கு ஏன் போகிறார்?

வரப்போகும் பொதுத் தேர்தலுக்கான விளம்பரச் செலவுகளை ஓரளவு குறைக்கலாமென்ற காரணத்தினால்தான்!

க. சேரன், விருதுநகர்.

(?) பதவி வேட்டைக்கு என்ன ஆயுதம் வேண்டும்-வில் அம்பா, துப்பாக்கியா?

இல்லை; கதர் நூலினால் செய்யப் பட்ட வலைதான் வேண்டும்!

முகமும்-மீசையும்......

★ 7-ம் பக்கத் தொடர்ச்சி

பிரிந்து தனிக் கட்சி அமைத்தவர். பிரஜா சோஷலிஸ்டுக் கட்சியிலே **ஒற்றுமைக்கு வெடி வைக்க வேண்டும் என்று முயற்சித்து அதன் காரணமாக** அங்கிருந்து பிரிந்தவரல்ல! தனது கொள்கைகள் — தனது லட்சியங்கள் — நிறைவேறிட பிரிவினைதான் சிறந்தது எனக் கருதினார்.

அவர் கூறுகிறார்; திராவிட நாடு பிரிவது கூடாது என்று! அப்படிப் பிரிய வேண்டுமென்பது தேசீய ஒற்றுமைக்கு வெடி வைப்பதாகும் என்று!

பிரிவினை, ஒரு சமுதாயத்தை வாழ்விக்க உதவுமானால் — ஒரு நாட்டை வளப்படுத்தப் பயன்படுமானால் — ஒரு நாடு உண்மையான சுதந்திரத்தோடு—உண்மையான சமத்துவத்தோடு—நடைபோடத் துணை புரியுமானால், அதை வெறுப்பதிலே என்ன அர்த்தமிருக்கிறது!

பிரிவினைக் கிளர்ச்சி எனப்பெயரிடப்பட்டு அழைக்கப்படும் இந்தக் கிளர்ச்சி திராவிடத்தின் விடுதலைக் கிளர்ச்சி என்பதை விடுதலை வீரர் லோகியா உணரவேண்டும்.

நமது விடுதலைப் போராட்டத்தைக் கேலிச் சித்திரம் மூலம் கிண்டல் செய்து விட்டால் போதாது—மித்திரனார்; ஏன் மித்திரனார் வம்சமே-நமது மீசையை ரசிப்பதோடு மட்டுமிலலாது நமது முகத்தையும்—அந்த முகம் அகத்தின் அழகு காட்டும் பளிங்கு போலிருபபதையும் — அந்தப் பளிங்கிலே பகுத்தறிவு புரியாக திராவிடத் தனியரசு மலர வேண்டுமென்ற ஆசை பிரதிபலிப்பதையும் கூர்ந்து நோக்கவேண்டும்!

மித்திரனாரே! எமது முகத்தைப் பாரும்-துரோகி அனுமன் சாயலோ — சுக்ரீவனின் சொரூபமோ—அல்ல இது!

கனக விசயர்களைக் காணும் போது மட்டும் சிவப்பேறும் செங்குட்டுவனின் முகம் இது!

விடுதலைபுரிப் பயணத்திற்கு அணிவகுத்து நிற்கும் வீரர்களைப் பார்த்து வெற்றிப் புன்னகை நெளியவிடும் தீரனின் திருமுகம் இது! நாடெனும் நிலைக் கண்ணாடியில நாங்கள கண்ட முகம்-நன்முகம்! அம்முகம் காண ஆரிய ஏடு மித்திரன் இன்னும் சிறிது அண்ணாந்து பார்க்கவேண்டும்!

அப்போது புரியும்—நமது முகமும் மீசையும்—மூவேந்தரை நினைவு படுத்துகிற உண்மை!

★

குன்றத்தூர்

25-3-56 ஞாயிறு மாலை 6 மணிக்கு தோழர் டி. என். சம்மந்தம் அவர்கள் தலைமையில், தோழர்கள், மு. கருணாநிதி, வழக்கறிஞர் பி. ஆர். கோகுலகிருஷ்ணன் பி. ஏ பி. எல். ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

சென்னை (திருவல்லிக்கேணி)

மறைந்த மாவீரர் இராகவன் நினைவு நாள்

சென்னை 42-வது வட்ட தி.மு.க. சார்பில், 25-3-56 ஞாயிறு மாலை 6 மணிக்கு திருவல்லிக்கேணி பண்டி வெங்கடேச நாயக்கன் தெருவில் (கெல்லட் உயர்நிலைப் பள்ளி அருகில்) தோழர் பூ. அரங்கசாமி அவர்கள் தலைமையில் நடைபெறும். அதுபோது தோழர்கள் சி. பி. சிற்றரசு, க. அன்பழகன், இளம்பரிதி ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

பெங்களூர் (அக்கிப்பேட்டை)

25-3-56 ஞாயிறு மாலை 6 மணியளவில் அக்கிப்பேட்டை சுபாஷ் நகர் திடலில், தோழர் ஜி. கிருட்டிணன் அவர்கள் தலைமையில் தோழர்கள் இரா. சு. தங்கப்பழம். மு. கோ வேந்தன் வே. இளஞ்சேரன் ஆகியோர் பேசுவர்.

ஆலங்குளம்

27-3-56 செவ்வாய்க் கிழமை மாலை 6 மணியளவில் பாண்டியனார் திடலில் தோழர் பி. எம். மணி அவர்கள் தலைமையில், திராவிட முன்னேற்றக் கழக பொதுச் செயலாளர் நாவலர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்கள் சொறபொழிவாற்றுவார்.

அரக்கோணம்

1-4-56 ஞாயிறு மாலை 6 மணிக்கு தோழர் எம். கே. அம்பிகாபதி அவர்கள் தலைமையில், தோழர்கள் மு. கருணாநிதி எஸ். எஸ். இராசேந்திரன், டி.வி. நாராயணசாமி, வி முனுசாமி, எம். சி., முல்லை சத்தி, ஏ. எல். சி. கிருஷ்ணசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்கள்.

பொன்மலையில் எஸ். ஆர். யூ. அமைப்புக் கூட்டம்

நாளது 27-3-56 மாலை 5-30 மணிக்கு பொன்மலையில் துணைப் பொதுச் செயலாளர் தோழர் என். வி.நடராசன் அவர்கள் முன்னிலையில் தென்பகுதி ரெயில்வே யூனியன் (எஸ். ஆர். யூ.) பொன்மலை கிளையின் அமைப்பு சம்மந்தமாக ஓர் ஆலோசனை கூட்டம் நடைபெறும். அதுசமயம் பொன்மலை தொழிற்சாலையில் பணியாற்றுகின்ற சகல தொழிலாளர் அனைவரும் கலந்து கொள்ள வேண்டுகிறோம்.

இங்ஙனம்,
ஜி. பராங்குசம். சம்சுதீன்.
[அமைப்பாளர்கள்]

ஆசிரியரும், அச்சிடுபவரும் வெளியிடுபவரும் மு. கருணாநிதி. 'முரசொலி' அச்சகம், 4/128, மவுண்ட்ரோடு, சென்னை-6